# போலீஸ் பார்வை

மாத இதழ்

POLICE PARVAI

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-10 • Volume-10 • இதழ்-8 • Issue-8 • ஜீன்-2025 • June -2025 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV  E_Book: www.policeparvai.com


## THE RISING TEAM

## தீவிர போக்சோ குற்ற விழிப்புணர்வு பிரச்சார இயக்கம்



கன்னியாகுமரி
SP டாக்டர்.R.ஸ்டாலின் IPS
அவர்களின் சாதனை

## வக்கீல்கள் ஏன் கருப்பு கோட் அணிகிறார்கள்?





## பணியின்போது உயிரிழந்த காவலர் குடும்பத்திற்கு உதவிய 2017 பேட்ச்

ஆணையர் முனைவர்
J.லோகநாதன் IPS அவர்கள்
வழங்கினார்




## தொப்பைக்கு காரணம் பற்பசையா?



தமிழர்கள் வாழ்வியல் அதிசயங்கள்


இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com
இணைய தளத்தில்
செய்திகளை உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்...



5 ராசிக்காரர்களுக்கு
இந்த மாதம் சூப்பரா
இருக்கப் போவது..


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


ROLLER
SKATING
7 Star


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846
Tamilnadu

# போலீஸ் பார்வை

ஜூன் 2025 மலர் 10 இதழ் 8



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S. ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**




All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only




# கொரோனாவை எதிர்கொள்வது எப்படி?

## ஆரோக்கியமாக வாழும் வாழ்வியல் முறையை அறிவோம்..!



பொதுவாக மனித வாழ்வில் நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம். நாம் எவ்வளவு பெரிய செல்வந் தனாக இருந்தாலும் பொன் பொருள், மண் மாட மாளிகை, சேவகர்கள், என அனைத்து வசதி வாய்ப்பு களையும் பெற்றிருந்தாலும் நம் மனமும் உடலும் ஆரோக்கியம் இல்லாமல் நாம் மகிழ்ச்சியாக வாழ இயலாது. நாம் உடல் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்றால் வாழ்வியல் முறையும் உணவியல் முறையும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும், சீராக இருத்தல் வேண்டும். நமது உடல் இயல்பாகவே தன்னைத்தானே சீரமைத்து சரியாக வைத்துக் கொள்ளும் ஆற்றலை உடையது. ஆனால் அதற்கு எதிர் மாறாக நமது உணவியல் முறையும், வாழ்வியல் முறையும், இருப்பதால் நமது உடல் சமச்சீர் தன்மையின்றி உடல் உறுப்புகள் பாதிப்படைந்து எதிர்ப்பு சக்தியை இழந்து உடல் உறுப்புகள் செயல் திறனற்ற நிலை உருவாகும்போது நாம் பலவிதமான நோய்க்கு ஆளாகி நோயாளியாக வாழும் சூழல் உருவாகிறது. எனவே கொரோனா, டெங்கு, மலேரியா, போன்ற பலவிதமான வைரஸ் கிருமிகளின் தாக்கத்தை எதிர்கொள்ள முடியாமல் உயிரிழக்க நேரிடுகிறது. நாம் நமது உடலில் இயல்பான செயலாற்றலை அறிந்து புரிதலுடன் அந்தந்த பருவ காலங்களில் விளையக்கூடிய காய்கறிகள், கனிகள், கீரைகள், ஆகிய உணவு வகைகளை பிரதானமாக ஏற்றுக்கொண்டு நம் உடலுக்கு கேடு விளைவிக்கும் வேதியல் கலவையால் உற்பத்தியான குளிர்பானங்களையும், சுவைக்காக ரசாயன பொருட்கள் கலந்து தயாரிக்கும் மசாலா கலந்த துரித உணவுகளையும் தவிர்த்து நம் உடலுக்கு தேவையான வைடமின்கள்நிறைந்த நமது உடல் உறுப்புகளுக்கு தொல்லை தராத எளிதில் ஜீரணிக்க கூடிய எதிர்ப்பு சக்தி மிகுந்த மிளகு, சீரகம், சோம்பு, இஞ்சி பூண்டு,கடுக்காய், மற்றும் கம்பு,சோளம்,கேள் விறகு,சாமை,தினை,போன்றசிறுதானிய வகைகளை உணவில் சேர்த்து உணணும் உணவுபழக்கத்தை பின்பற்றி எந்த விதமான வைரஸ் கிருமிகளும் நம் உடலை தாக்காமல் எதையும் எதிர்கொள்ளும் மனோத்திடத்துடன் வாழ்வியல் முறையையும் உணவியல் முறையையும் பின்பற்றி மன ஆரோக்கியத்துடனும், உடல் ஆரோக்கியத்துடனும், நலமுடன் மகிழ்ச்சியாக வாழ்வோம்.

**ஆசிரியர்**

### இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.



# இயற்கையும்.. அதில் அடங்கிய ஆன்மாக்களும்..

நம் அகண்ட பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். காலங்காலமாக ரிஷிகளும், முனிவர்களும், யோகிகளும், சித்தர்களும் நம்முடைய தெய்வீக பாரம்பரியக் கலாச்சாரத்தை மக்களுக்கும் அரசர்களுக்கும் போதித்து சென்றுள்ளனர். நம் பார்க்கக் கூடிய அனைத்தும் உயிர்களிடமும் உயிரற்றவைகளிடமும் ஆன்மா உள்ளது. அதில் ஒளிந்திருக்கும் ஆன்மாவுடன் எப்படி தொடர்பு கொள்வது என்பதை நமக்குக் கற்றுத் தந்து உள்ளனர்.

பிரபஞ்சம் முழுவதுமே ஆன்மாக்கள் நிறைந்து உள்ளது. பர ஆன்மாவே பரமேஷ்வரனாகும். பர ஆன்மாவில் இருந்து பிரிந்து ஜீவ ஆன்மாவாகும். ஈசன் என்றும் பெருஞ் சாகரத்தில் இருந்து அனைத்து ஆன்மாக்களும் பிரிந்து வருகின்றது. நாம் பார்க்கும் பிரபஞ்சம் இயற்கைகள் அனைத்தும் ஆன்மாக்கள் நிறைந்து உள்ளது. அந்த ஆன்மாக்கள் 3 வகையாக பிரிக்கப்படுகின்றன.

இயங்கும் ஆன்மா, இயக்கத்தில் இயங்கா ஆன்மா, முக்தி நிலை ஆன்மா.

**1. இயங்கும் ஆன்மா**

இயங்கும் ஆன்மா பிரபஞ்சத்தில் இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் ஆன்மாவாகும். இது அண்ட சராசரம் முழுவதும் உள்ள உலகங்களில் வாழும் உயிர் ஆன்மாவாகும்.

அவைகள் மனிதன், மரம், செடி, கொடிகள், புல், பூண்டு, ஊர்வன, பறப்பன, தத்துவன. தாவுவன, கண்ணுக்கு தெரிந்த பூச்சி இனங்கள், வண்டுகள்,தேள், பூரான், பாம்பு, புழுக்கள் அனைத்துமே ஆன்மாக்களாகும்.

கண்ணுக்குத் தெரியாத பல கோடி பூச்சி, புழு நுண்ணுயிர்களும், கிருமிகளும் அனைத்துமே ஆன்மாவில் அடங்கும். இந்த இயங்கும் ஆன்மா பிறவிச் சூழலில் சிக்கி பிறவி எடுத்துக் கொண்டே இருக்கும். இந்த பிறவிச் சுழற்சியை சித்தர்களும், ஞானிகளும், யோகிகளும் கூறியுள்ளார்கள். அதைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

**மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகம் சிவ புராணம்**

ஆன்மாக்கள் எப்படி பிறவி எடுக்கின்றன என்பதை தன் பாடலில் அழகாக மாணிக்க வாசகர் கூறுகின்றார்.

பாடல்:

*புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி*
*பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாய்*
*கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்*
*வல்அசுராகி முனிவராய் தேவராய்ச்*
*செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்*
*எல்லா பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்*
*என்று ஈசனிடம் பாடுகின்றார்.*

ஒவ்வொரு உருவமாக ஆன்மாக்கள் பிறந்து பிறந்து இறக்கும். பின்பு இறந்து பிறக்கும் என்று நிற்காமல் சுழன்று கொண்டுருக்கின்ற ஆன்மாக்களின் பிறவிச் சூழற்சியை கூறுகின்றார்.

இந்த ஆன்மாக்களின் பிறவிச் சுழற்சியை பட்டினத்தாரும் தன் பாடல்களில் கூறுகின்றார். அதையும் பார்ப்போம்..

ஓம் காளி ஓம் நமசிவாய



# கருடசித்தர்

Dr.பாலகிருஷ்ண சுவாமி எரசை, தேனி மாவட்டம்.

**பட்டினத்தார் பாடல்: கோயில் திரு அகவல்**

*நினை மின் மனனே*
*நினை மின் மனனே*
*சிவபெருமானைச்*
*செம் பொனாம் பலவானை*
*நினை மின் மனனே*
*நினை மின் மனனே*
*அலகை தேரின் அல மருகாலின்*
*உலகப் பொய் வாழ்க்கையை*
*உடலை ஓம்பற்க*

*பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்*
*தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்*
*பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்*
*உணர்ந்தன மறக்கும், மறந்தன உணரும்*
*புணர்த்தன பிரியும், பிரிந்தன புணரும்*

*அருந்தின மலமாம்*
*புனைந்தன அழுக்காம்*
*உவப்பன வெறுப்பாம்*
*வெறுப்பன உவப்பாம்*
*என்றிவை அனைத்தும்*
*உணர்ந்னை அன்றியும்*
*பிறந்தன பிறந்தன*
*பிறவிகள் தோறும்*

என்று ஆன்மாக்களின் பாவ, புண்ணிய கர்ம சுழற்சியைச் கூறுகின்றார். சித்தர்களும் ரிஷிகளும் முனிவர்களும் ஆன்மாக்களின் பிறவிச் சுழற்சியைப் பற்றி கூறுகின்றனர்.

பிறவிகளைப் பற்றி நம்பினாலும் நம்பாவிட்டாலும் பிறவிகள் ஆன்மாக்களுக்கு சுழன்று கொண்டே இருக்கும். இது பிரபஞ்ச சூட்சம சிவ ரகசியம் ஆகும். இது பஞ்சாட்சர சிதம்பர ரகசியத்தில் அடங்கி நிற்கும். சித்தர்கள் நாம் இயங்கக் கூடிய ஆன்மாக்களாக இருக்கும்போது நல்ல வினைகளையும் தெய்வ பக்திகளையும் செய்ய வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

**2.இயக்கத்தில் இயங்கா ஆன்மா: மரணமில்லா பெருவாழ்வு**

இந்த ஆன்மாக்கள் சித்தர்களின் ஜீவ சமாதி அமைவாகும். தற்காலிகமாக இயங்காமல் இருக்கும் ஆன்மாவாகும். இந்த ஆன்மா பிறவிச் சூழலில் இருந்து விடுதலை அடைந்த ஆன்மாவாகும். இந்த விடுதலை அடைந்த ஆன்மாக்களுக்கு பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை.

ஈசன் கட்டளை இருக்கும்போது ஜீவ சமாதியில் இருந்து எழுந்து தனக்கு விருப்பமான உருவத்தை எடுத்துக் கொள்வார்கள். இந்த ஆன்மாவுக்கு உருவம் தேவைப்படும்போது சமாதியில் இருந்து விட்டு மீண்டும் அவசியம் வரும்போது தான் விரும்பிய உருவத்தை எடுப்பார்கள்.

பிறப்பு இருந்தால்தான் இறப்பு ஒன்று வரும். இவர்கள் உருவம் எடுத்துவிட்டு தன் கடமை முடிந்த பிறகு தான் எடுத்த உருவத்தை பிரபஞ்சத்தில் மறைத்துவிட்டு மீண்டும் ஜீவ சமாதிக்கு சென்றுவிடுவார்கள்.

இதுவே மரணமில்லா பெருவாழ்வு ஆகும்.

உடம்போடு அழியாமல் இருப்பது மரணமில்லாமல் பெரு வாழ்வு இல்லை. தேவை இல்லாத போது ஆன்மாவாகர மறைந்து இருந்து கடமைகளைச் செய்ய நேரம் வரும்போது தான் விரும்பிய உருவத்தை எடுத்துக் கொள்வார்கள். தேவை இல்லாதபோது ஆன்மாவை மறைத்து கொள்வார்கள்.

இந்த நிலையை அடைய சித்தர்களும் ரிஷிகளும் கடுந்தவத்தை மேற்கொண்டு இந்த நிலையை அடைவார்கள். இந்த ஜீவ சமாதி ஆன்மாவின் ஓய்வு நிலையாகும். ஒரு இடத்தில் ஜீவ சமாதியில் இருந்து எழுந்து கடமையைச் செய்துவிட்டு வேறொரு இடத்தில் ஜீவ சமாதியில் அமர்வார்கள். இது யுகம் யுகமாக கடந்து கொண்டுதான் இருக்கின்றது.

**3. முக்தி நிலை ஆன்மா**

பக்தி நிலையில் அனைத்து எளிய உயிர்களின் பசி நீக்கி அனைத்து உயிர்களிடமும் அன்பு செய்து தெய்வமே சரணாகதி என்று வாழ்ந்த ஆன்மாக்களுக்கு முடிவில் அந்த தெய்வ ஆன்மாவோடு இணைந்து கொள்ளுதல் முக்தியாகும்.

பக்தி யோகத்தால் மட்டுமே முக்தி கிடைக்கும். அனைத்து ஆன்மாக்களுக்கும் எளிமையாய் செல்லும் மார்க்கம் பக்தி மார்க்கமாகும். எந்த தெய்வங்களை இடைவிடாது நினைத்து பக்தியால் மூழ்கி கிடக்கின்றோமோ இறுதியில் அந்த தெய்வத்திடமே அடங்கி முக்தி மோட்சம் பெறுதலாகும்.

இதை அடைந்தவர்கள் ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆவார்கள். இவர்கள் இடைவிடாது தெய்வங்களை நினைத்து பூசித்து அந்த தெய்வத்திடமே அடங்கியவர்கள். அனைத்து நாயன்மார்களும் சிவ பக்தி செய்து சிவனை அடைந்தார்கள். அனைத்து ஆழ்வார்களும் வைணவர்களும் விஷ்ணுவையும், கிருஷ்ணனையும் வழிபட்டு அவருடன் முக்தி அடைந்தார்கள். இது முழுமை பெற்ற ஆன்மாவாகச் சொல்லப்படுகின்றது. அனைத்து பிறவிகளிலும் மனிதப் பிறவி பக்தி யோகம் செய்வதற்கும், கர்ம யோகம் செய்வதற்கும், ஞான யோகம் செய்வதற்கும் ஒரு உயர்ந்த பிறவியாகும். இந்த அரிதான மனிதப் பிறவி

இருக்கும்போது நாம் தெய்வங்களை நினைத்து ஆன்மாவை நல்ல வழியில் திருப்ப வேண்டும். உடல் இருக்கும்போதே நாம் நல்ல வினைகளைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆன்மாவும் பூமியில்பிறந்து வாழ்ந்து பின்பு இறந்து அதன் பின் ஆவியாய் அலைந்து மீண்டும் அது செய்த நன்மை தீமை வினைகளுக்கு ஏற்ப பிறப்பெடுக்கும். மனித குலத்துக்கு பக்தி மார்க்கமே எளிய மார்க்கமாகும்.

**செடிகளும், மரங்களும், கொடிகளும் நம்முடன் பேசும்**

செடிகள், மரங்கள், கொடிகளுக்கு ஆன்மா இருக்கின்றது. நாம் ஒரு செடிக்கோ அல்லது மரத்திற்கோ அல்லது கொடிகளுக்கோ தண்ணீர் ஊற்றும்போது அது நம் ஆன்மாவுடன் பழக விரும்பும். நம் மேல் அந்த செடி, கொடிகள் பரிபூரண அன்பைச் சொல்லும். அவைகளின் அன்பை நாம் உணரா விட்டாலும் நாம் செலுத்தும் அன்பை ஒவ்வொரு செடி, கொடிகளும் உணரும். பிரபஞ்சத்தில் அனைத்து உயிர்களிடமும் ஆன்மா உள்ளது.

செடிகளும் மரங்களும் நீர் இல்லாமல் வாடி நிற்கும்போது, அந்த சமயத்தில் நாம் அதைக்கடக்கும்போது நீர் வேண்டும் என்ற உணர்வை வெளிப்படுத்தும். இவைகள் சூட்சமாக பேசுவதை சித்தர்க்கும் ஞானிக்கும் புரிந்து கொள்வார்கள். இதைத்தான் வள்ளாலாரும் கூறுகின்றார் வாடிய பயிரை காணும் பொழுது அது நீர் இல்லாமல் புலம்பும் வேதனையை தன் பாடலில் கூறுகின்றார். இராமலிங்க வள்ளலார் அனைத்து ஆன்மாக்களுடனும் அன்புடன் பேசுவர். அவர் எழுதிய பாடல்கள் அனைத்து உயிர்களிடமும் அன்பின் வெளிப்பாடாகும்.

**திருஅருட்பா: வள்ளலார்**

*வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்*
*வாடினேன் பசியினால் இனத்தே*
*வீடு தோறிருந்தும் பசியறா தயர்ந்த வெற்றாரைக்*
*கண்டுளம் பதைத்தேன்.*
*நீடிய பிணியால் வருந்துகின்றோர் என் நேர்*
*உறக் கண்டுளந்துடித்தேன்.*
*ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்*
*சிளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்.*

உயிர் ஆன்மாக்களிடம் இராமலிங்க அடிகளார் வத்திருந்த உயர்ந்த அன்பு நமக்கு விளங்குகின்றது. அனைத்து உயிர்களுக்கும் பசிப்பிணியை நீக்கக் கூடிய பண்பை மக்களுக்கு கற்றுக் கொடுத்தனர். அனைத்து உயிர்களுக்கும் பசிக்கும் போது உணவும் நீரும் கொடுக்க வேண்டும் என்ற ஒப்பற்ற உயர்ந்த எண்ணத்தை மக்களுக்கு பூமியில் இருக்கும் போதே நல்ல வினைகளைச் செய்ய வேண்டும். நல்ல வினைகள் நம் ஆன்மாவை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்லும்.

**போக முனிவரின் சூட்சம வித்தை**

போக முனிவர் செடி கொடிகள், மரங்கள், பறவைகள், விலங்குகள், புழுபூச்சிகள் அனைத்து உயிர்களிடமும் பேசக் கூடிய சூட்சம வித்தையை தன் சீடர்களுக்கு கற்றுக் கொடுத்தார். சித்தர்கள் அனைவரும் அனைத்து உயிர்களிடமும் பேசக்கூடிய சூட்சமக் கலையைக் கற்று வைத்திருந்தனர்.

**பட்சிப் பாஷை**

பட்சிப் பாஷை என்பது அனைத்துப் பறவைகளிடமும் பேசுவது. அந்தப் பறவைகளும் தங்கள் என்ன உணர்வுகளை தங்கள் சத்தத்தின் மூலம் வெளிப்படுத்தும். அந்த உணர்வுகளை சித்தர்களும் வாங்கி புரிந்துகொண்டு தாங்களும் அந்த பறவைகளுக்கு சப்தம் இடுவார்கள். சித்தர்கள் கொடுக்கும் சப்தத்தை பறவைகள் புரிந்து கொள்ளும். இதன் மூலம் நன்மை தீமைகளை சித்தர்கள் பறவைகளிடம் பேசிக்கொள்வார்கள். இதன் மூலம் பட்சிகளும் ஆன்மாவே என்பது விளங்குகின்றது.

**மிருக பாஷை**

போகமுனிவரும் மற்றும் சித்தர்களும் அனைத்து மிருங்களிடமும் பேசுவார்கள். அந்த மிருகங்களும் சித்தர்களுக்கு பதில் கொடுக்கும். தங்களுடைய சப்தத்தாலே தங்கள் உணர்வை வெளிப்படுத்தும். சித்தர்களும் தங்கள் சப்தத்தை வெளிப்படுத்தும் மிருகங்களுக்கு பதில் கொடுப்பார்கள். அனைத்து உயிர்களிடம் பேசக் கூடிய சூட்சம ரகசியத்தை சித்தர்கள் கற்றுக் கொண்டார்கள்.

**பாறை, கல் மண்ணில் இருக்கும் ஆன்மா**

வரம் பெற்ற ஆன்மாக்களும்,சித்தி பெற்ற ஆன்மாக்களும் கல், பாறை மண் இவைகளில் அடங்கி இருக்கும்.சில சாபம் பெற்ற ஆன்மாக்கள் பாறைக் குகைகளில் அடங்கி இருக்கும். தங்கள் சாபம் விலகும் நாள் வரை அல்லது சாப விமோசனம் ஆகும் வரை பாறைக் குகைகளிலும் சில மண் மேடுகளிலும் இந்த ஆன்மா அடங்கி இருக்கும் விடுதலை நாள் வரும் போது சாப விமோசனம் ஆகி மறுபடியும் பிறவிக்குள் சென்று விடும்.

**போகர் கொடு மாந்திரீகம்**

போகர் கொடு மாந்திரீகம் என்ற ஓலைச் சுவடியில் பட்சி பாஷைகள் பேசும் முறைகளும், மிருக பாஷைகள் பேசும் முறைகளும் மேலும் அனைத்து உயிர்களிடமும் பேசும் முறைகளும் எழுதி வைத்திருக்கின்றார். அவைகளை கற்றுக் கொண்டு நன்மைகளுக்கு நாம் பயன்படுத்த வேண்டும். சித்தர்கள் சொன்ன அனைத்து கலைகளுமே கற்றுக் கொண்டு அதை மனிதகுலத்திற்கு நன்மைக்காகப் பயன்படுத்துவோம்.

**தெய்வீக வழியில் நின்று**

அனைத்து உயிர்களிடத்தும் ஆன்மா உள்ளத்தை உணர்ந்து அனைத்து எளிய உயிர்களின் பசிப்பிணியை போக்கி நம் ஆன்மாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வோம்.

**பூமி மனிதனுக்கு மட்டும் சொந்தமானது அல்ல**

பூமியில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் சொந்தமானது, மனிதனுக்கு என்ன உரிமையோ அதுவே அனைத்து உயிர்களுக்கும் உள்ளது என்ற நீதியை உணர்ந்து செயல்படுவோம்.



பணியின்போது விபத்து நேரிட்டு உயிரிழந்த

# காவலர் குடும்பத்திற்கு நிதி உதவி செய்த 2017 பேட்ச் காவலர்கள்

## ஆணையர் முனைவர் J.லோகநாதன் IPS அவர்கள் குடும்பத்தினரிடம் வழங்கினார்

மதுரை மாநகர ஆயுதப்படையில் பணிபுரிந்த, காவலர் திரு.மோகன்குமார் என்பவர் தனது வீட்டின் அருகில் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக, அருகிலிருந்த மரத்தின் கிளை முறிந்து ஏற்பட்ட விபத்திற்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி கடந்த பிப்ரவரி மாதம் 06.02.2025ம் தேதி அன்று இயற்கை எய்தினார்.

மறைந்த காவலரின் குடும்ப நலன் கருதி, உதவி செய்யும் விதமாக காவல்துறையில் அவருடன் பணியில் சேர்ந்த 2017 ஆம் ஆண்டு பேட்ச் காவல் நண்பர்கள் மூலம் திரட்டப்பட்ட மொத்த பணம் ரூ.22,18,300-க்கான காசோலை மற்றும் சேமிப்பு திட்ட பத்திரங்களை 23.05.2025 அன்று மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் J.லோகநாதன் IPS அவர்கள் காவலரின் குடும்பத்தாரிடம் வழங்கினார்கள். இந்நிகழ்வில் 2017-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த காவலர்கள் கலந்து கொண்டனர்.

சிறப்பு நிருபர்:J.பீமராஜ், மதுரை.



# சீன ராணுவமும், இந்திய தளவாடங்களும்..

சீனா இராணுவத்துடன் ஒப்பிட்டு நம்மை விட சீனா இராணுவம் மிக வலுவான நிலையில் உள்ளது என கூறும் சில நபர்களுக்கு இப்பதிவு.

உலகிலேயே அதிவேகமாக சென்று தாக்கும் ஏவுகணை - இந்தியாவின் #பிரம்மோஸ். (ஒலியை விட 2.5 மடங்கு) இதற்கு இணையான ஒரு ஏவுகணை யை பத்தாண்டு ஆராய்ச்சிக்கு மேலும் அமெரிக்க, சீனாவால் தயாரிக்க முடியவில்லை.



உலகிலேயே ஒரே ஏவுகணை யில் 6 அணுகுண்டுகளை சுமந்து, ஒரேநேரத்தில் 6 இலக்குகளை தாக்கும் ஒரே ஏவுகணை - #பிருத்வி.

உலகிலேயே மிகச்சிறிய நவீன போர்விமானம் - இந்தியாவின் #தேஜஸ்

உலகிலேயே அதிவேக போர்விமானம் - #சுகோய் 30 ரக இந்திய விமானம்.

உலகிலேயே ஒரே ஏவுகணையில் 10 எதிரி விமானங்களை வீழ்த்தும் ஆற்றல் பெற்றது - இந்தியாவின் #ஆகாஷ் ஏவுகணை.

உலக அணு ஆயுத ஏவுகணையில் காற்றில்லா உயரத்திற்கு சென்று 5,000 கி.மீ தொலைவை 17 நிமிடத்தில் தாக்கும் அதிவேக அணுஆயுத ஏவுகணை - #அக்னி 5

உலகிலேயே GPS தொழில்நுட்பத்துடன் கடலுக்கடியில் நீர்மூழ்கி கப்பலையே சாம்பலாக்கும் ஏவுகணை -இந்தியாவின் #K4 ஏவுகணை.

உலகிலேயே ராடாரால் கண்டுபிடிக்க முடியாத தரை ஒட்டி சென்று 1,000 கி.மீ அப்பால் உள்ள இலக்கை அழிக்கும் ஒரே ஏவுகணை- இந்தியாவின் #நிர்பாய்.

உலகிலேயே அணு ஆயுதத்தை கொண்டு தாக்கினாலும் அழிக்க இயலாத ஒரே பீரங்கி - #அர்ஜுனா டாங்கி.

உலகிலேயே 1 நிமிடத்தில் 20 ஏவுகணையை செலுத்தும் ஆற்றல் பெற்ற ராக்கெட் லாஞ்சர் இந்தியாவின் .... #பினாகா.

இனிமேலும் இந்திய ஆயுதங்களின் மேல் சந்தேகம் இருப்பவர்களுக்கு ....பாகிஸ்தான் ராணுவ அமைச்சர் மற்றும் ஆஸ்திரிய போர் நிபுணரின் பேட்டிகளை (யூட்யூபில்) உள்ளது கண்டு திருந்துங்கள்.

நாம் ஒரு இந்தியனாய் இருப்பதில் பெருமை கொள்வோம்.

---

# 17 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் வாலிபருக்கு ஆயுள் தண்டனை

## DSP திரு.செந்தில்குமார் அவர்கள் தலைமையிலான போலீசாரின் முயற்சியால் திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு

விளாம்பட்டியில் போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட வாலிபருக்கு ஆயுள் தண்டனையுடன் கூடிய 5 ஆண்டுகள் சிறை மற்றும் ரூ.1,60,000 அபராதம். திண்டுக்கல் மாவட்டம் விளாம்பட்டி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 2024-ம் ஆண்டு 17 வயது சிறுமியை காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி அழைத்துச் சென்று திருமணம் செய்து பாலியல் வன்கொடுமை செய்த சித்தையன்கோட்டை பகுதியை சேர்ந்த நரசிம்மன்(22) என்பவரை விளாம்பட்டி போலீசார் போக்சோவில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த நிலையில் நிலக்கோட்டை DSP திரு. செந்தில்குமார் அவர்கள் தலைமையிலான போலீசார் மற்றும் அரசு வழக்கறிஞர் ஆகியோரின் சீரிய முயற்சியால் திண்டுக்கல் சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள், நரசிம்மனுக்கு ஆயுள் தண்டனையுடன் கூடிய 5 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.1,60,000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.



சிறப்பு நிருபர்: குருசரவணன், திண்டுக்கல்



பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. (103)t

இவருக்கு உதவினால் பிறகு நமக்கு இது கிடைக்கும் என்று எண்ணாதவராய் ஒருவர் செய்த உதவியின் அன்பை ஆய்ந்து பார்த்தால், அவ்வுதவியின் நன்மை கடலைவிடப் பெரியது ஆகும்.

**தென்காசி மாவட்ட SP திரு.S.அரவிந்த் அவர்களின் உத்தரவின் பேரில்**

# புகையிலை மற்றும் போதைபொருள் விற்பனையை தடுக்க தென்காசி காவல்துறை தொடர் வேட்டை

தென்காசி மாவட்டத்தில் புகையிலை பொருட்கள் விற்பனையை தடுக்கும் வகையில் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.அரவிந்த் அவர்களின் உத்தரவின் பேரில் மாவட்டம் முழுவதும் தொடர் வாகன சோதனை செய்யப்பட்டது.

புகையிலைப் பொருட்களை கடைகளில் விற்பனை செய்தால் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் மூலம் கடைக்கு சீல் வைக்கப்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பாவூர்சத்திரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோட்டையூர் பகுதியில் புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக காவல் துறைக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் திரு.பட்டுராஜா அவர்கள் தலைமையிலான காவல் துறையினர் கோட்டையூர் சிவன் கோவில் தெருவை சேர்ந்த ராமையா என்பவரின் மகன் மகேஷ்(45) என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி பின்னர் சிறையில் அடைத்தனர்.

மேலும் அவரிடம் இருந்து விற்பனைக்காக



வைக்கப்பட்டிருந்த சுமார் 5 கிலோ எடை கொண்ட ரூபாய் 3,000 மதிப்புக்கான புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

நிருபர்:ஆறுமுகச்சாமி, தென்காசி.



# ஏடிஎம்-ல் தவறவிட்ட ரூ.2,10,000/- ரொக்கத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்த இளைஞர் அல்போன்ஸ்

## பாராட்டிய திருநெல்வேலி மாவட்ட SP சிலம்பரசன் அவர்கள்

திருநெல்வேலி மாவட்டம் ஏர்வாடியை சேர்ந்த அல்போன்ஸ்(22) என்பவர் 03.06.2025 அன்று ஏர்வாடியில் உள்ள IOB ATM-ல் பணம் எடுக்க சென்ற போது, அங்கு யாரோ தவறவிட்ட பணம் ரூபாய் 2,10,000/- கேட்பாரற்று இருந்துள்ளது. அந்த பணத்தை உரிய நபரிடம் ஒப்படைக்கும் நோக்கத்தில் ஏர்வாடி காவல் நிலையத்திற்கு வந்து நேர்மையான முறையில் ஒப்படைத்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக ஏர்வாடி காவல்துறையினர் விசாரித்த போது, அந்த பணம் நம்பிநத்தலைவன் பட்டையம், கீழத் தெருவை சேர்ந்த இசக்கி ரமேஷ்(31) என்பவருடையது என்று தெரியவந்தது. மேற்படி இசக்கி ரமேஷை ஏர்வாடி காவல் நிலையம் வரவழைத்து, உதவி ஆய்வாளர் திரு. சுடலைகண்ணு அவர்கள் இசக்கி ரமேஷ் தவறவிட்ட ரூபாய் 2,10,000/- பணத்தை உரிய முறையில் ஒப்படைத்துள்ளார்.

இதுகுறித்து தகவல் அறிந்த திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.N.சிலம்பரசன்., அவர்கள் அல்போன்ஸை நேரில் அழைத்து



அவருடைய நேர்மையை பாராட்டும் வகையில் பொன்னாடை அணிவித்து பாராட்டு சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கி கௌரவித்தார்.

நிருபர்: ஜோதிபாசு, திருநெல்வேலி

## Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் கடுமையான தொடர் நடவடிக்கையால்

# கஞ்சா வேட்டையில் கன்னியாகுமரி காவல்துறை 5 பேர் கைது, 1.100 கிலோ கஞ்சா பறிமுதல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா,குட்கா,புகையிலை போன்ற போதை பொருட்களுக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் கடுமையான தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக ஈத்தாமொழி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொண்டனர்.

சோதனையில் 1.100 கிலோ கிராம் எடை கொண்ட அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா பறிமுதல் செய்தனர் ஈத்தாமொழி தர்மபுரம் பகுதியை சேர்ந்த ராஜகுமார் என்பவரின் மகன் அபிராம் குமார்(20) மங்காவிளை பகுதியை சேர்ந்த பாலசுப்ரமணியன் என்பவரின் மகன் கபின்(25) கோட்டார் வடலிவிளை பகுதியை சேர்ந்த மணி என்பவரின் மகன் சுரேஷ்(29), இடலாக்குடி அச்சன் கிணறு தெருவை சேர்ந்த மாஹின் அபூபக்கர் என்பவரின் மகன் முகமது ஷாபி(31), இரணியல்




பகுதியை சேர்ந்த சுயம்பு என்பவரின் மகன் அபினேஷ்(29) ஆகிய ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.இது தொடர்பாக மேலும் வேறு யாருக்கும் தொடர்புள்ளதா என தொடர் விசாரணை நடைபெற்று வருகிறது. இளைஞர்கள் போதை பாதையில் இருந்து விடுபட்டு வெற்றிப்பாதையில் பயணம் செய்து வாழ்க்கையில் வெற்றி அடைய கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நிருபர்:J.ஜெயவேல்முருகன், கன்னியாகுமரி

### இந்திய தேசிய இராணுவத்தின் ஜான்சி ராணி ரெஜிமென்டில் கேப்டன்

# வீரப் பெண்மணி கோவிந்தம்மாள்





இந்திய விடுதலைப் போரில் இந்திய தேசிய இராணுவத்தில் அதிகம் மலேசிய இரப்பர் தோட்ட தமிழ்த் தொழிலாளர்கள் சேர்ந்தார்கள்.
அதை ஏளனப்படுத்தி ஆங்கிலேயரான வின்ஸ்டன் சர்ச்சில் பின்வருமாறு கூறினார்.

மலேசிய தோட்டத்தில் இரப்பர் பால் உறிஞ்சும் தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உறைந்து உள்ளது.

அதற்கு நேதாஜி பின்வருமாறு பதிலடி கொடுத்தார். அந்த தமிழர்கள் தான் நாளை ஆங்கில ஏகாதிபத் தியத்தின் இரத்தத்தை குடிப்பார்கள். அந்த அளவிற்கு மலேசிய இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் தேசபக்தி மிக்கவர்களாக இருந்தனர். அவர்களில் நிறையபேர் நேதாஜி அவர்களின் இந்திய தேசிய ராணுவ படையில் இணைந்தனர் அதில் வீரப்பெண்மணி கோவிந்தம்மாளும் ஒருவர். மலேசியாவின் மலாக்கா பிராந்தா பகுதியில் மாவீரர் நேதாஜி பிரச்சாரம் செய்த போது அவரது வீர உரையை கேட்டு விடுதலை உணர்வு பெற்று அப்படையின் நிதிக்காக தன் 6 பவுன் வளையல்களையும், தனது திருமணத்திற்கு சீதனமாக தந்த ஒரு ஏக்கர் ரப்பர் தோட்டத்தையும் தானமாக கொடுத்தார் கோவிந்தம்மாள்.

பின்னர் சில மாதங்கள் கழித்து இந்திய தேசிய இராணுவத்தில் இளைஞர்களை சேருமாறு பிரச்சாரம் செய்தார் நேதாஜி. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படையான ஜான்சி ராணிப் படையில் பெண்களையும் சேருமாறு அழைத்தார். அதை ஏற்று 1943-ல் ஜான்சி ராணிப்படையில் கோவிந்தம்மாள் சேர்ந்து பணிபுரிந்தார். தன், 16 வயதில் சிப்பாயாக சேர்ந்து, நேதாஜியிடம் போர் பயிற்சி பெற்றார். பின், 1,000 பெண்கள் இடம்பெற்ற ஜான்சி ராணி ரெஜிமென்டில் கேப்டனாக பதவி உயர்வு பெற்றார். பிறகு பல இடங்களில் நடந்த போர்களில் கோவிந்தம்மாள் தலைமையில் பெண்கள் படை போரிட்டு வென்றுள்ளது.

**வந்தேமாதரம் ஜெய்ஹிந்த்**





# பொதுமக்கள் குறை தீர்க்கும் முகாமில் புகார் மனுக்களுக்கு விரைவில் தீர்வு

## காவல் ஆணையர் திரு.சந்தோஷ் ஹாதிமணி IPS அவர்கள் ஏற்பாடு

தமிழக காவல்துறை தலைமை இயக்குனர் DGP சங்கர்ஜிவால் IPS அவர்கள் உத்தரவுப்படி பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் வாரத்தின் ஒவ்வொரு புதன் கிழமையும் நெல்லை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் 04-06-2025 அன்று நடைபெற்ற இம்முகாமில் 17 நபர்கள் கலந்து கொண்டு காவல் ஆணையர் திரு.சந்தோஷ் ஹாதிமணி IPS அவர்களிடத்தில் புகார் மனுக்களை அளித்தார்கள்.

புகார் மனுக்கள் மீது சரியான நடவடிக்கை மேற்கொண்டு உரிய தீர்வு கிடைக்க வழிவகை செய்யப்படும் என காவல் ஆணையர் கூறினார்கள்.

இம்முகாமில் காவல் துணை ஆணையர்கள் (மேற்கு) V.கீதா அவர்கள், (கிழக்கு) திரு.V.வினோத் சாந்தாராம் அவர்கள் (தலைமையிடம்) திரு.S.விஜயகுமார் அவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிருபர்: ஜோதிபாசு, திருநெல்வேலி.

# ஆலிவ் ஆயில் எலும்புக்கு உறுதி



ஆலிவ் ஆயில் எலும்புக்கு வலுவளிப்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ள ஒரு விஷயமாகும் சமையலில் ஆலிவ் எண்ணெய் பயன்படுத்தும் பழக்கம் இந்தியா உள்பட உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் ஆலிவ் எண்ணெயின் மருத்துவ குணம் தொடர்பாக ஸ்பெயினின் கிரோனா பகுதியில் உள்ள மருத்துவ ஆய்வு நிறுவனம் சார்பில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. டாக்டர் ஜோசப் ட்ருயிட்டா அவர்கள் தலைமையில் 2 ஆண்டுகள் இந்த ஆய்வு நடைபெற்றது.

ஆய்வுக்காக எலும்பு பாதிப்பால் அவதிப்படுபவர்கள் பட்டியல் மருத்துவக் குறிப்புகளில் இருந்து தயாரிக்கப்பட்டது அவர்களுக்கு ஆலிவ் எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவுகள் தொடர்ந்து வழங்கப்பட்டு கண்காணிக்கப்பட்டது. இதில் அவர்களது எலும்புகள் வலுவடைந்து நல்ல குணம் பெற்றது தெரியவந்தது, எலும்புகளை உறுதிப்படுத்தும் குணம் ஆலிவ் ஆயிலுக்கு இருப்பதை டாக்டர்கள் கண்டறிந்து உறுதி செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண் IPS அவர்கள் உத்தரவின்பேரில், கிழக்கு மண்டலதில் இன்று நடைபெற்ற காவலர் குறைதீர் முகாமில், Dr.P.விஜயகுமார் IPS காவல் இணை ஆணையாளர் (கிழக்கு) அவர்கள் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சிறப்பு நிருபர்: LNK சந்தன், சென்னை

---



கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.ஜெயக்குமார் IPS அவர்கள் அறிவுரையின்பேரில் சிதம்பரம் நகர காவல் ஆய்வாளர் திரு.ரமேஸ்பாபு சிதம்பரம் அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியில் மாணவிகளுக்கு பெண்களுக்கு எதிரான குற்றங்கள் சம்பந்தமாகவும் போதைப்பொருள் தவிர்க்க வேண்டும் எனவும் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

சிறப்பு நிருபர்: P.முத்துக்குமரன், கடலூர்



விழுப்புரம் மாவட்ட அரகண்ட நல்லூர் காவல் நிலையம் அருகே

# பெங்களூரிலிருந்து கடத்தி வரப்பட்ட 440 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல்

காவல் குழுவினரை SP திரு.P.சரவணன் IPS அவர்கள் பாராட்டினார்

440 கிலோ புகையிலை மற்றும் குட்கா பொருட்கள் பறிமுதல் செய்த வழக்கில் விழுப்புரம் மாவட்ட அரகண்ட நல்லூர் காவல் நிலைய தனிப்படை காவலர்கள், பெண் பாரா காவலர் மற்றும் ஆட்டோ ஓட்டுநர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

அரகண்டநல்லூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வாகனத்தை தணிக்கையில் பெங்களூரில் இருந்து கடத்திவரப்பட்ட புகையிலை மற்றும் குட்கா பொருள்களை கைப்பற்ற வாகனத்தை நிறுத்தினர்.

ஆனால், குட்கா கடத்தி வந்தவர்கள் வாகனத்தை நிறுத்தாமல் காவல் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த பேரிகாடில் இடித்துவிட்டு, அவர்கள் வந்த திசையில் திரும்பி அரகண்டநல்லூர் காவல் நிலையம் வழியாக செல்ல முற்பட்டனர்.

அப்போது, தனிப்படையினர் அரகண்டநல்லூர் காவல் நிலைய பாரா காவலர் திருமதி.ரேணுகா அவர்களுக்கு தகவல் தெரிவித்தனர். உடனே, பாரா காவலர் திருமதி. ரேணுகா அவர்கள் காவல் நிலையத்தை விட்டு வெளியே வந்து, அங்கிருந்த ஆட்டோ ஓட்டுநர் உதவியுடன் உடனடியாக பேரிகார்டு வைத்து குட்கா கடத்தி வந்த வாகனத்தை தடுத்து நிறுத்தினார். பின் தொடர்ந்து வந்த தனிப்படையினர் குட்கா கடத்திய வாகனத்தை மடக்கி பிடித்தனர்.

மேலும், அந்த வாகனத்தை சோதனை செய்த போது அதில், 440 கிலோ குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் இருப்பதும், அவை பெங்களூரில் இருந்து கடத்திவரப்பட்டதும் தெரிய வந்தது.



தொடர்ந்து வாகனத்தில் வந்தவர்களை கைது செய்து, அவர்களிடம் இருந்த புகையிலை மற்றும் குட்கா பொருட்களை கைப்பற்றினர். குற்றவாளிகளை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தனர்.

இவ்வழக்கில் துரிதமாக செயல்பட்டு எதிரிகளை கைது செய்ய உதவிய தனிப்படையினர், காவல் உதவி ஆய்வாளர் திரு.லியோ சார்லஸ், தலைமை காவலர்கள் திரு.மகாராஜா மற்றும் திரு.பாலமுருகன், முதல் நிலை காவலர்கள் திரு.குமரகுருபரன், திரு.நீலமேகம் திரு.சத்தியம், காவலர் திரு.அருள், பாரா காவலர் திருமதி.ரேணுகா, ஆட்டோ ஓட்டுநர் திரு.அர்ஜுன் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.P.சரவணன் IPS அவர்கள் பாராட்டி நற்சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கினார்.

நிருபர்: R.ராமநாதன், விழுப்புரம்



## ஹாகினி முத்திரை செய்வதால் ஏற்படும் நன்மைகள்...

இரு கை விரல்களின் முனைகளை ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டிருக்க வேண்டும் இம்முத்திரை ஆறாவது சக்கரமாகிய ஆக்ஞை சக்கரத்தை திறக்கிறது. எனவே, மூளையை தூண்டிவிடுகிறது நினைவாற்றலை வளர்க்கிறது வலது மூளைக்கும் இடதுமூளைக்கும் உள்ள கூட்டுறவை மேம்படுத்துகிறது மனவலிமையே எனது வலிமை என்று சொல்லிக்கொண்டு தரையில் சம்மணங்காலிட்டு அமர்ந்து 10 நிமிடம்செய்தால் நல்லபலன்கிடைக்கும்



கடலூர் அண்ணாமலை நகர் காவல் ஆய்வாளர் திரு.அம்பேத்கர் அவர்கள் அண்ணாமலை நகர் பகுதிக்கு உட்பட்ட வங்கிகளில் வாடிக்கையாளர்களுக்கு பணத்தை எடுத்துச் செல்லும்போது கவனமாக எடுத்து செல்ல வேண்டும். வாகனத்தை பணத்துடன் வழியில் எங்கும் நிறுத்திவிட்டு செல்லக்கூடாது. வங்கிக்கு வரும் முதியவர்கள் துணைக்கு ஒருவரை அழைத்து வரவேண்டும். வீட்டில் விலைமதிப்புள்ள பொருட்களையோ நகைகளையும் பணத்தையோ வைத்துக் கொள்ளாமல், வங்கிகளில் உள்ள லாக்கரில் பத்திரமாக வைக்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நிருபர்: S.ஜெயச்சந்திரன், கடலூர்.





செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438




# 5 ராசிக்காரர்களுக்கு செம சூப்பரா இருக்கப்போகுது

ஜூன் 2025 மாதத்தில் சில முக்கிய கிரக பெயர்ச்சிகள் நடக்க உள்ளன. கிரகங்களின் மாற்றம், சேர்க்கை, மற்றும் பார்வை பலன் காரணமாக சில ராசிகளுக்கு சூழ்நிலை அதிர்ஷ்டமானதாக மாறும். அந்த விதத்தில் ஜூன் மாதத்தில் மிதுனம், கன்னி ராசி உட்பட 5 ராசியை சேர்ந்தவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றமும், திடீர் பண லாபம் கிடைக்க உள்ளது. மேலும் எந்தெந்த விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்வோம்.

## மிதுனம்

ஜூன் மாதத்தில் நடக்கக்கூடிய கிரக பெயர்ச்சிகளால் அலைச்சல், சிரமங்களை சந்திக்க நேர்ந்தாலும், உங்களின் வேலையில் வெற்றி கிடைக்கும். உங்களின் நிலுவையில் உள்ள அனைத்து பணிகளையும் சிறப்பாக நிறைவேற்ற முடியும். வேலைகள் அனைத்தும் திட்டமிட்டபடி முடிக்க முடியும். பணியிடத்தில் நிலவி வந்த பிரச்சனைகள், மன அழுத்தமான சூழல் விலகும். எப்படிப்பட்ட சூழலையும் சமாளிக்கும் மனநிலை ஏற்படும். பணியிடத்தில் உங்களின் மதிப்பு மரியாதையும் அதிகரிக்கும். குடும்ப வாழ்க்கையில் சிலர் நல்ல செயல்கள் நடக்க வாய்ப்பு உண்டு.

## கன்னி

ஜூன் மாதத்தில் பலவிதத்தில் முன்னேற்றம் தரக்கூடிய காலமாக அமையும். உங்கள் வேலையில் எதிர்பார்த்த முன்னேற்றம், லாபம் உண்டாகும். வாகனம், வீடு, மனை வாங்க நினைப்பவர்களுக்கு அதற்கான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்க ளின் பொருளாதார நிலை முன்னேற்றம் அடையும். அதனால் குடும்பத்தில் மகிழ்ச்சியும், மனதில் நிம்மதியும் உணர்வீர்கள். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வதும், வேலைகளை முடிப்பதில்லை எச்சரிக்கை யுடன் இருந்தால் நன்மைகள் உண்டாகும். இந்த மாதத் தில் மகிழ்ச்சியான பயணம் செல்ல வாய்ப்பு உண்டாகும்.

## துலாம்

ஜூன் மாதம் மிகவும் பயனுள்ளதாக அமையும். உங்களின் பிரச்சனைகள் குறையும். பணியிடத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு எதிர்பார்க்கலாம். நீங்கள் செய்யக்கூடிய தொழில், வியாபாரம் தொடர்பாக பெரிய வெற்றி கிடைக்க வாய்ப்பு உண்டு. நிதிநிலை வலுவாக இருக்கும். திடீர் பண ஆதாயம், அதிர்ஷ்டம் உண்டாகும். வெளியூர், வெளிநாடு தொடர்பான வேலைகளில் வெற்றி கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்குத் தகுதிக்கேற்ப நல்ல வேலை அமையும்.

## தனுசு

இந்த ஜூன் மாதம் மிகவும் அற்புதமான காலமாக அமையும். குருவின் ஏழாம் பார்வை ராசி மீது விழுவதால் நன்மைகள் பல நடக்கும். இந்த மாதத்தில் உங்கள் வீட்டில் சுப காரியங்கள் நடப்பதற்கான வாய்ப்பு உண்டு. அதற்கான செயல்பாடுகளில் மும்முரமாக ஈடுபடுவீர்கள். வீடு, மனை என ரியல் எஸ்டேட் தொடர்பாக லாபம் கிடைக்கும். உங்கள் வேலையில் வெற்றிக்காக கொஞ்சம் போராட வேண்டியதாக இருக்கும். இருப்பினும் அதற்கான பலன் முழுமையாக கிடைக்கும்.

## கும்பம்

ஜூன் மாதத்தில் செவ்வாய் கிரகம் மற்றும் கேதுவின் ஏழாம் பார்வை உங்கள் ராசி மீது விழுவதால் லாபம் அதிகரிக்கும். மேலும் குருவின் மிக நன்மை தரக்கூடிய ஒன்பதாம் பார்வையும் உங்கள் ராசியின் மீது விழுகிறது. அதனால் உங்கள் வேலையை முடிப்பதில் ஆற்றலும் தைரியமும் அதிகரிக்கும். பணியிடத்தில் சக ஊழியர்களுடன் இணக்கமாகவும் அவர்களின் ஆதரவையும் பெறுவீர்கள். உங்கள் வருமான ஆதாரங்கள் அதிகரிக்கும். தான தர்மங்களில் ஈடுபடுவீர்கள்.




**மேஷ இராசிஅன்பர்களே!**

மனதில் உள்ளதை உடைத்த தேங்காய் போன்று பளிச்சென்று சொல்ல தயங்காதவர் நீங்கள்! உத்யோகஸ்தர்களுக்கு உத்யோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களிடம் எந்த பாகுபாடுமின்றி இருப்பது தேவையற்ற பகையை ஒழிக்கும். ஏற்றத் தாழ்வினை பார்க்காமல் அவர்களுடன் சுமூகமாக பழகி வருவதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு; மளிகைக் கடை வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு லாபம் உயரும். வியாபாரிகள் தங்கள் கொள்முதலை பெருக்குவீர்கள். சேமிப்பும் கூடும். குடும்பத்தலைவிகள் கணவன், மனைவி இணைந்து செயல்பட்டு குடும்ப நலனுக்கு பாடுபடுவர். இந்த கால கட்டத்தில் தங்களுக்கு பணப்பற்றாக்குறை ஏற்படும். ஆதலால், சிக்கன நடவடிக்கையை எடுப்பீர்கள்.கலைஞர்களுக்கு தாங்கள் நினைத்த கதாபாத்திரமும் கிடைக்கும். தங்கள் திறமையை அதிகரிக்க ஒரு சிலர் கூத்துப் பட்டரையில் சேருவீர்கள். மாணவர்களுக்கு அரசு தேர்வு எழுதும் மாணவர்கள் படிப்பில் கவனமுடன் படித்து எழுதி பார்ப்பது மிக நல்லது. நேரத்தை வீணடிக்காமல் வெளியே சுற்றித் திரியாமல் படிப்பது தேர்வு சமயத்தில் மிகவும் சுலபமாக இருக்கும்.

**வணங்க வேண்டியதெய்வம்: திருப்பதி பெருமாள்**
**ஸ்லோகம்: சுப்ரபாதம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**
**பரிகாரம்: லக்ஷ்மி நரசிம்ம பெருமாளை புதன்கிழமை தரிசிப்பது.**
**சந்திராஷ்டம தினங்கள் :**
**வைகாசி 26-ம் தேதி 09/06/2025 திங்கள்கிழமை காலை 10.09 மணி முதல் வைகாசி 28-ம் தேதி 11/06/2025 புதன் கிழமை இரவு மணி 8.56.வரை.**




**ரிஷப இராசி அன்பர்களே:**

அன்பு செய்வதில் உங்களுக்கு நிகர் நீங்களே. தாயிடம் பாசமிக்கவர் உத்யோகஸ்தர்களுக்கு சம்பளம் சரிவர வராமல் அதாவது காலம் தாழ்த்தி கொடுத்து வந்த சம்பளம் இனி மாத ஆரம்பத்திலேயே கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு தேவையற்ற காலவிரயத்தை தவிர்க்கவும். காரணம் தங்களுக்கு அடிக்கடி மறதி வந்து போகும். தங்கள் வேலைகளை டைரியில் எழுதி வைத்துக் கொண்டு திட்ட மிட்டு செயல்படுங்கள்.

குடும்பத் தலைவிகள் தாங்கள் எதிர்பார்த்தவாறு தங்களுடைய இதுவரை சேர்த்து வைத்த நகை சீட்டில் தங்களுக்கு புதிய நகை வாங்குவீர்கள். வாகனம் ஓட்டும் போது கவனம் தேவை.

கலைஞர்களுக்கு ஒரு சிலர் தாங்கள் திரைப்படத்தில் சேருவதற்காக ஒரு தொகையை தயாரிப்பாளருக்கு தர முடிவெடுப்பீர்கள். இருப்பினும் அந்த திரைப்பட பேனரை பற்றி நன்கு ஆராய்ந்து செய்வது நல்லது.

மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ் படிப்புக்காக தற்போதிலிருந்தே பொது அறிவு விசயங்களை தெரிந்து கொள்வது நல்லது. மாணவர்கள் அதற்குண்டான குருப்பை தேர்வு செய்வது நல்லது.

**வணங்கவேண்டியதெய்வம்: திங்கள்கிழமைகளில் முருகனை வணங்கி வழிபடுதல் நல்லது.**
**ஸ்லோகம்: திங்கள்கிழமைதோறும் முருகன் காயத்திரி சொல்லுதல்.**
**பரிகாரம்: முருகருக்கு சிவப்பு மலரால் மாலையோ அல்லது பூச்சரமோ கொடுத்து கும்பிடவும்.**
**சந்திராஷ்டம தினங்கள்:**
**வைகாசி 28-ம் தேதி 11/06/2025 புதன்கிழமை இரவு 8.57 மணி முதல் வைகாசி 31-ம் தேதி 14/06/2025 சனிக்கிழமை அதிகாலை மணி 5.47 வரை.**




**மிதுன ராசி அன்பர்களே!**

குடும்பத்திற்காக தியாகம் செய்யக் கூடியவர்கள். கணக்குப் பார்த்து செலவு செய்பவர் நீங்கள் உத்யோகஸ்தர்களுக்கு மார்கெட்டிங் பிரிவில் வேலை செய்யும் உத்யோகஸ்தர்களுக்கு நீண்ட நாட்களாக தாங்கள் கேட்ட சில முக்கியமான சலுகைகள் கிடைக்கும். கவலை வேண்டாம். இந்த மாதம் மகிழ்ச்சிற்கு குறைவிருக்காது.

வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. ஏனெனில் தங்களிடம் வியாபாரிகள் கடன் கேட்பார்கள் கொடுத்து விட்டு பின்பு வருந்துவதை விட கொடுப்பதை தவிர்க்கவும்.

குடும்பத் தலைவிகளுக்கு பணம் தேவைக்கேற்ப கிடைக்கும். மாமியார் மருமகள் உறவு நன்றாக இருக்கும். உறவினர், விருந்தினர் வருகை ஏற்பட்டு மகிழ்ச்சி அதிகரிக்கும். இந்த மாதம் உங்கள் கனவு பலிக்கும்.

கலைஞர்களுக்கு வெளிமாநிலத்தில் இருந்து வேற்று மொழிகளில் நடிக்க அழைப்பு வரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போது முழுமையாக கவனமாகப் படித்துவிட்டு கையெழுத்திடுவது நல்லது. மாணவர்களுக்கு சோம்பேறித்தனம் குடிக்கொள்ளும். ஆதலால், தாங்கள் கூடுமானவரை சோம்பேறித்தனத்தை புறக்கணியுங்கள். படிப்பில் கவனம் செலுத்துங்கள்.

**வணங்க வேண்டியதெய்வம்: அம்மனுக்கு அல்லி பூ அர்ச்சனை செய்து வழிபட நன்மை ஏற்படும்.**
**ஸ்லோகம்: துக்க நிவாரண அஷ்டோத்தரம் சொல்லுதல்.**
**பரிகாரம்: அம்மனுக்கு வெள்ளிகிழமை அன்று மல்லிகை மாலை அணிவிப்பது நல்லது.**
**சந்திராஷ்டம தினங்கள்:**
**வைகாசி 31-ம் தேதி 14/06/2025 சனிக்கிழமை அதிகாலை 5.48 மணி முதல் ஆனி 2-ம் தேதி 16/06/2025 திங்கள்கிழமை பகல் 12.03 மணி வரை.**




**கடக இராசி அன்பர்களே!**

வீட்டிற்கு வருபவர்களை நன்கு உபசரிக்கத் தெரிந்தவர் நீங்கள். உத்யோகஸ்தர்களுக்கு உத்யோகத்தில் தங்கள் வேலையில் சிறு சிக்கல்கள் ஏற்படும். அதனை அழகாக செய்து முடித்து தாங்கள் தங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர்.

நீங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும் காலமாக இந்த மாதம் தங்களுக்கு இருக்கும். வியாபாரம் சூடுபிடித்து அதில் அதிக லாபத்தினை பெறுவீர்கள்.

குடும்பத் தலைவிகள் தங்கள் கணவரின் உடல் நலனுக்காக பல விசயங்களை விட்டுக் கொடுப்பீர்கள். மாமியாரை மதித்து கணவனின் அன்பை பெறுவீர்கள். குடும்பத் தலைவிகள் வீட்டினை கலைப் பொருட்களை கொண்டு அலங்கரிப்பீர்கள்.

கலைஞர்களுக்கு படம் முடிந்தும் இன்னும் திரைக்கு வராமல் இருப்பவர்களுக்கு இந்த மாதல் திரையிடும் தேதி அறிவிக்கப்படும். மேலும், புதிய வாய்ப்புகளும் கதவைத் தட்டும்.

மாணவர்கள் விளையாட்டுத்தனத்தை கைவிட்டுவிட்டு தாங்கள் கல்வியில் கவனம் செலுத்தினால் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். அது தங்கள் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:**
**ஆஞ்சநேயர் வழிபாடு நன்மை தரும்.**
**ஸ்லோகம்: ஆஞ்சநேயர் ஸ்லோகம் சொல்லுதல்.**
**பரிகாரம்: அங்காள அம்மனுக்கு முல்லை பூச்சரம் கொடுத்து கும்பிடவும்.**
**சந்திராஷ்டம தினங்கள்:**
**ஆனி 2-ம் தேதி 16/06/2025 திங்கள்கிழமை பகல் 12.04 மணி முதல் ஆனி 4-ம் தேதி 18/06/2025 புதன்கிழமை மாலை மணி 4.15 வரை.**




**சிம்மம் ராசி அன்பர்களே!**

தடைகளை முறியடித்து சாதனை படைக்கும் மாதம் இது. பணப்புழக்கம் அதிகரிக்கும். அவசியத் தேவைகள் பூர்த்தியாகும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். குடும்பத்தில் ஆடம்பர வசதிகள் பெருகும். குடும்பத் தில் இருந்து வந்த பிரச்னைகள் மறையும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் உதவிகரமாக செயல்படுவர். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்ட உறவினர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து திரும்பி வந்து அன்பு பாராட்டுவார்கள். கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேர்வர். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். மாதப் பிற்பகுதியில் உறவினர்களால் மனக்கசப்பு தரும் சம்பவங்கள் நடைபெறக்கூடும் என்பதால், கூடுமானவரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

சிலருக்கு புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பணியாளர்களுக்கு இதுவரை இருந்த அவப்பெயர் மறையும். சக ஊழியர்களிடையே உங்கள் செல்வாக்கு உயரும். நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்ப உறுப்பினர்களால் புதிய ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். புதிய பதவி தேடி வரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: மஹாலெஷ்மி.**
**ஸ்லோகம்: லெஷ்மி காயத்திரி சொல்லுதல்.**
**பரிகாரம்: மகாலட்சுமி தாயாருக்கு நெய்தீபம் ஏற்றுவது.**
**சந்திராஷ்டம தினங்கள் : ஆனி 4-ம் தேதி 18/06/2025 புதன்கிழமை மாலை 4.16 முதல் ஆனி 6-ம் தேதி 20/06/2025 வெள்ளிக்கிழமை இரவு மணி 7.06 வரை.**




**கன்னி ராசி அன்பர்களே!**

ஆனி தொடக்கத்தில் குடும்பத்தில் உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். சாதனங்கள் வாங்குவீர்கள். சாதனை படைக்கும் மாதம் இது. பணப்புழக்கம் அதிகரிக்கும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். குடும்பத்தில் ஆடம்பர வசதிகள் பெருகும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் மறையும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தொடங்கிய காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், பெருமையும் கிடைக்கும். பெண்கள் வகையில் நற்பலனை எதிர்பார்க்கலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாக இருந்தாலும் முடிந்துவிடும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதுடன், விரும்பிய இடமாற்றமும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அனுகூலமான போக்கு காணப்படும். விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். சுயதொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கு வளர்ச்சிக்கான வழி பிறக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகம் தரும் மாதம். குடும்ப உறுப்பினர்களிடையே உங்கள் மீதான அன்பும் அக்கறையும் அதிகரிக்கும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு பணிகளில் கவனம் தேவை. சிலருக்கு புதிய பதவி தேடி வரும்.

**வணங்க வேண்டியதெய்வம்: முருகப் பெருமான்.**
**ஸ்லோகம்: பைரவர் அஷ்டகம்.**
**பரிகாரம்: வெங்கடேச பெருமாள், முருகனுக்குக் அர்ச்சனை.**
**சந்திராஷ்டம தினங்கள்: ஆனி 6-ம் தேதி 20/06/2025 வெள்ளிக்கிழமை இரவு 7.07மணி முதல் ஆனி 8-ம் தேதி 22/06/2025 ஞாயிற்றுக்கிழமை இரவு மணி 9.27 வரை.**




**துலா இராசி அன்பர்களே !**

வருமானம் அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியும் ஆதாயமும் ஏற்படுவதுடன், செலவுகளும் ஏற்படும். பணவரவுக்குக் குறைவிருக்காது. மாத மத்தியில் கணவன் – மனைவிக்கிடையே இருந்த பிரச்னை மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆடம்பர வசதிகள் பெருகும். மனதில் மகிழ்ச்சியும் உற்சாகமும் அதிகரிக்கும். நண்பர்களின் ஆதரவும், அவர்களால் ஆதாயமும் உண்டாகும். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். புதிய ஆடை ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சிலருக்கு வசதியான புதிய வீட்டுக்கு குடிபோகும் வாய்ப்பு உண்டாகும். வேலையின் காரணமாகப் பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேர்வதற்கான வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். மேலதிகாரிகள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். சிலருக்கு பணியின் காரணமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியங்கள் தாமதமாக முடியும். சக வியாபாரிகளிடம் கவனமாக இருக்கவும். பங்குதாரர்களால் ஆதாயம் ஏற்படக்கூடும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு கணவரின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும். செலவுகளுக்குத் தேவையான பணம் கிடைக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**வேண்டியதெய்வம்: ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய வழிபாடு.**
**ஸ்லோகம்: சூரிய காயத்திரி.**
**பரிகாரம்: வெள்ளியன்று லட்சுமி தாயாருக்கு நெய்தீபம்.**
**சந்திராஷ்டம தினங்கள்: ஆனி 8-ம் தேதி 22/06/2025 ஞாயிற்றுக்கிழமை இரவு 9.28 மணி முதல் ஆனி 10-ம் தேதி 24/06/2025 செவ்வாய்க்கிழமை இரவு மணி 12.13 வரை.**




**விருச்சிக இராசி அன்பர்களே !**

தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். அரசாங்கக் காரியங்கள் சாதகமாகும். தாய்வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த சுபச்செய்தி இந்த மாதம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டாலும், உடனே நீங்கிவிடும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் பிரச்னைகளைத் தவிர்த்துவிடுவீர்கள். சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் கூடி வரும். சிலருக்கு வீடு, மனை வாங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

வாழ்க்கைத்துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பத்துடன் ஆன்மிகப் பயணங்கள் மேற்கொண்டு, பிரசித்திப் பெற்ற வெளிமாநில புண்ணியத் தலங்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்கு வெளிநாடு செல்வதற்கான விசா கிடைக்கும். பிள்ளைகளால் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.பணியாளர்களுக்கு மகிழ்ச்சியான மாதம். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். தொழிலதிபர்கள், வியாபாரிகள் மாதப் பிற்பகுதியில் சிறப்பான பலன்களைக் காணலாம். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.பெண்கள் குடும்பத்தாரிடம் நன்மதிப்பை பெறுவர். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனுகூலமாக இருப்பர். வேலைக்கு செல்லும் பெண்களுக்க மகிழ்ச்சியான மாதம். சுயதொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**வணங்க வேண்டியதெய்வம்: விநாயகர் கோயிலில் நெய்தீபம் வழிபாடு உங்களுக்கு நன்மையைத் தரும்.**
**ஸ்லோகம்: வியாழன் காயத்திரி சொல்லுதல்.**
**பரிகாரம்: தேய்பிறை சதுர்த்தியன்று விநாயகர் வழிபாடு, ஞாயிறு ராகு காலத்தில் காளிக்கு நெய் தீபம், சனிக்கிழமையன்று ஆஞ்சநேயருக்கு அர்ச்சனை நன்மை தரும்.**
**சந்திராஷ்டம தினங்கள்: ஆனி 10-ம் தேதி 24/06/2025 செவ்வாய்க்கிழமை இரவு 12.14மணி முதல் ஆனி 13-ம் தேதி 27/06/2025 வெள்ளிக்கிழமை அதிகாலை மணி 4.13 வரை.**




**தனுசு இராசி அன்பர்களே !**

எடுத்த காரியம் வெற்றி அடையும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். பகைவர்களின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பொருளாதார வளம் கூடும். மாத முற்பகுதியில் கணவன் – மனைவிக் கிடையே அந்நியோன்யம் இருந்தாலும், மாதப் பிற் பகுதியில் சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையுடன் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். திருமண முயற்சி களில் இருந்து வந்த தடைகள் நீங்கி, நல்ல வரன் அமையும். சிலருக் குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பணவரவு நன்றாக இருக்கும். புதிய வாகனம் வாங்கலாம். நண் பர்கள் உறுதுணையாக இருப்பார்கள். ஆடம்பரப் பொருட்கள் வாங்கு வீர்கள். உறவினர்கள் வருகையும், அவர்களால் நன்மையும் கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பான வளர்ச்சி காணலாம். சம்பள உயர்வுக்கு தடையில்லை. பதவி உயர்வு உண்டு. எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும்.தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு அலைச்சல் அதிகரித்தாலும், நல்ல வளார்ச்சியும், பணவரவும் இருக்கும். பங்குதாரர்கள் தக்க சமயத்தில் உதவுவர். சிலநேரங்களில் முயற்சிகளில் தடைகள் வரலாம்.பெண்களுக்கு குடும்பத்தோடு புனித தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும்.

**வணங்க வேண்டியதெய்வம்: துர்க்கை வழிபாடு.**

**ஸ்லோகம்: சுக்கிர காயத்திரி சொல்லுதல்.**

**பரிகாரம்: தேய்பிறை அஷ்டமியில் பைரவர் வழிபாடு**

**சந்திராஷ்டம தினங்கள்: ஆனி 13-ம் தேதி 27/06/2025 வெள்ளிக்கிழமை அதிகாலை 4.14 மணி முதல் ஆனி 15-ம் தேதி 29/06/2025 ஞாயிற்றுக்கிழமை 10.24 மணி வரை.**




**மகர இராசி அன்பர்களே !**

மிகவும் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் இருக்கவேண்டிய மாதம். ஆனால், ஓரளவுக்கு நன்மைகளும் உண்டு. பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத் தேவைகள் பூர்த்தி ஆகும். பொன் பொருள் சேரும். உறவினர்களுடன் சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். அவர்களிடமிருந்து ஒதுங்கி இருப்பது அவசியம். சிலருக்கு தடைபட்ட திருமணம் கூடிவரும். சகோதர வகையில் ஏற்படக்கூடிய பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யவும். பிள்ளைகளால் சிற்சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். திடீர் பயணங்களால் உடல் அசதி உண்டாகும். பயணங்களின் போது கைப்பொருள்களை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவும்.அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக பணியாளர்களிடம் போதுமான ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. அதிகாரிகளை அணுகும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பலன் கிடைப்பதற்குக் கூடுதலாக உழைக்கவேண்டி வரும். முக்கிய முடிவுகளை எடுப்பதில் நிதானம் அவசியம். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். போட்டியாளர்களால் தொல்லைகள் ஏற்படக்கூடும்.பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். குடும்பத்தோடு புனித தலங்களுக்கு சென்று வருவீர்கள். தடைபட்டு வந்த சுபநிகழ்ச்சிகள் கைகூடும். அலுவலகத்தில் உற்சாகமாகச் செயல்படுவீர்கள்.

**வணங்க வேண்டியதெய்வம்: விநாயகருக்கு அர்ச்சனை செய்வது.**

**ஸ்லோகம்: துர்க்கா அஷ்டகம் சொல்லுதல்.**

**பரிகாரம்: முருகனுக்கு பால் அபிஷேகம், பிரதோஷத்தன்று நந்தீஸ்வரருக்கு அர்ச்சனை, தேய்பிறை சதுர்த்தி அன்று விநாயகர் வழிபாடு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டம தினங்கள் : ஆனி 15-ம் தேதி 29/06/2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.25 மணி முதல் ஆனி 17-ம் தேதி 01/07/2025 செவ்வாய்க்கிழமை மாலை மணி 6.57 வரை.**




**கும்ப இராசி அன்பர்களே !**

செயலில் வெற்றி, பொருளாதாரச் செழிப்பு, மகிழ்ச்சி ஆகிய அனுகூலப் பலன்களுக்கான மாதம் இது. மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உறவினர்களுடனான உறவு சுமுக மாகக் காணப்படும். குடும்பத்தோடு புனிதத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். சிலருக்கு பொன், பொருள் ஆகியவை சேரும். கணவன் – மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பெண்களால் ஆதாயம் உண்டாகும். விருந்து, விழாக்களில் கலந்துகொள்வீர்கள். பெரியோர் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாய்வழி உறவுகளால் எதிர்பார்த்த நன்மைகள் நடக்கும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் உண்டாகும். தந்தையின் ஆலோசனை பயனுள்ளதாக இருப்பதுடன், முன்னேற்றத்துக்கும் வழிகாட்டுவதாக அமையும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். பணியாளர்கள் உற்சாகமாக பணிகளில் ஈடுபட்டு மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பதவிஉயர்வு கிடைக்கும்.தொழில், வியாபாரத்தில் பொருளாதார வளம் அதிகரிக்கும். பகைவர் இடையூறும், அரசு வகையில் அனுகூலமற்ற போக்கும் மறையும். திடீர் பணவரவு இருக்கும். போட்டிகளைச் சமாளித்து வெற்றி கொள்ளும் ஆற்றல் உண்டாகும். பெண்களுக்கு குடும்பத்தில் ஆனந்தம் அதிகரிக்கும். தோழிகள் ஆதரவுடன் செயல்படுவர். வேலைக்கு செல்லும் பெண்கள் பலன் பெறுவர். சுயதொழில் செய்யும் பெண்களுக்கு லாபம் அதிகரிக்கும்

**வணங்க வேண்டிய தெய்வம்: சிவனை வழிபடுதல் நல்லது**

**ஸ்லோகம்: விநாயகர் அஷ்டோத்திரம் சொல்லுதல்.**

**பரிகாரம்: செவ்வாய்க்கிழமை அன்று முருகனுக்கு அபிஷேகம்,**

**சந்திராஷ்டம தினங்கள்: (1) வைகாசி 21-ம் தேதி 04/06/2025 புதன்கிழமை பகல் மணி 11.24 முதல் வைகாசி 23-ம் தேதி 06/06/2025 வெள்ளிக்கிழமை இரவு 10.18 மணி வரை (2) ஆனி 17-ம் தேதி 1/07/2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.58மணி முதல் ஆனி 20-ம் தேதி 04/07/2025 வெள்ளிக்கிழமை அதிகாலை மணி 5.41 வரை.**




**மீன இராசி அன்பர்களே !**

பணப்புழக்கம் அதிகரிக்கும் மாதம் இது. வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். அவப்பெயர் நீங்கும். செல்வாக்கு அதிகரிக்கும். சுபநிகழ்ச்சிகளால் மனதில் உற்சாகம் ஏற்படும். பகைவர்களால் இருந்து வந்த இடையூறுகள் மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பழுதான பழைய வாகனத்தை மாற்றிவிட்டு, புதிய வாகனம் வாங்குவீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கக்கூடும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கூடுமானவரை தொலைதூரப் பயணங்களைத் தவிர்க்கவும். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்ட உறவினர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து, வலிய வந்து மன்னிப்புக் கேட்பார்கள். நண்பர்கள் உங்கள் முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். தாயாருடனும், தாய்வழி உறவினர்களுடனும் மனவருத்தங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு பொருளாதார வளம் கூடும். லாபம் சிறப்பாக இருக்கும். ஆனால், போட்டியாளர்களால் இடையூறு வரலாம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், இதுவரை இருந்து வந்த அவப்பெயர் நீங்கி, செல்வாக்கு அதிகரிக்கும். வீண் மனக்கவலை மறையும். அதிகாரிகளை அனுசரித்துச் செல்லவும். பெண்கள் குடும்பத்தோடு புனித தலங்களுக்கு சென்று வருவர். வேலை பார்ப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். சுய தொழில் செய்யும் பெண்களுக்கு நல்ல லாபம் இருக்கும்.

**வணங்கவேண்டியதெய்வம்: சிவபெருமான் வழிபாடு.**

**ஸ்லோகம்: வில்வாஷ்டகம் சொல்லுதல்**

**பரிகாரம்: வெள்ளிக்கிழமை மாலை லட்சுமி வழிபாடு, வியாழனன்று தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை**

**சந்திராஷ்டம தினங்கள்: வைகாசி 23-ம் தேதி 06/06/2025 வெள்ளிக்கிழமை இரவு 10.19 மணி முதல் வைகாசி 26-ம் தேதி 09/06/2025 திங்கள்கிழமை காலை 10.08 மணி வரை**

# THE RISING TEAM

# தீவிர போக்சோ குற்ற விழிப்புணர்வு பிரச்சார இயக்கம்

## கன்னியாகுமரி SP டாக்டர்.R.ஸ்டாலின் IPS அவர்களின் சாதனை

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.R.ஸ்டாலின் IPS அவர்கள் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக போக்சோ குற்றங்கள் இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்தை உருவாக்கும் பொருட்டு நிமிர் (The Rising Team) என்ற போக்சோ சட்ட விழிப்புணர்வு இயக்கத்தை 25.04.2025 அன்று தொடங்கி வைத்தார்.

ஒவ்வொரு உட்கோட்டத்திற்கும் தலா 3 பெண் காவலர்கள் வீதம் 15 பெண் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு, ஒரு ஆய்வாளர் தலைமையில் காவல் குழு செயல்பட்டு வருகிறது. இரு சக்கர வாகனங்கள் மூலம் அனைத்து கிராமங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

**நிமிர் (The Rising Team) சாதித்தது என்ன?**

மாவட்டத்தின் அனைத்து கிராமங்கள், மக்கள் கூடும் இடங்கள், பள்ளி கல்லூரிகள், பொது இடங்கள், வேலை செய்யும் இடங்கள் என பல்வேறு இடங்களில் போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி குழந்தைகள் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றியும் அதற்கான தண்டனைகள் பற்றியும் எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

* இதுவரை மாவட்ட முழுவதிலும் 5 லட்சத்துக்கு மேற்ப்பட்ட பொதுமக்களை நேரில் சந்தித்துள்ளது இந்த குழு.

* ஒரு பெற்றோர் மட்டும் இருக்கும் 2,000 குழந்தைகள் கண்காணிப்பு.

* 964 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.



* நான்கு குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தம்.

* 15, 211 காவல் உதவி செயலிகள் பதிவிறக்கம்.

* 10,500 விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள்.

* போதை பொருட்கள் பற்றிய தகவல் கிடைத்து நடவடிக்கை.

* பாதுகாப்பிற்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் whatsapp எண் அனைத்து குழந்தைகள் பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* ஏற்கனவே பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இழப்பீடு பெற்றுத் தரப்பட்டுள்ளது.

* போக்சோ குற்றங்களால் பாதிக்கப்பட்டு பயத்தினால் புகார் அளிக்காமல் இருந்தவர்கள் நிமிர் மூலம் புகார் பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* கவனிக்க முடியாத நிலையில் ஒரு பெற்றோர் மட்டும் உள்ள குழந்தைகள் பலரை குழந்தைகள் காப்பகங்களில் சேர்க்க உதவி செய்யப்பட்டுள்ளது.

# கல்லீரலை காப்போம்!



மது அருந்தி இரண்டு மணி நேரத்திற்கு பிறகுதான் அவை சிறுநீரக வெளியேற்றப்படுகிறது, ஆனால் ஆல்கஹால் அடுத்த 4, 5 நொடியிலேயே நம் இரத்தத்தில் கலந்துவிடுகிறது, இரத்தத்தின் ஆல்கஹலை பிரித்து இதயத்தில் சீரான இரத்த ஓட்டத்தை கொடுக்க கல்லீரலின் போராட்டமே மனிதனுக்கு அது போதையாக மூளையின் நரம்புகள் தூண்டப்படுகிறது. கல்லீரல் அதனுடைய வேலையை சரியாக செய்யவில்லை என்றால் மது அருந்திய சிறிது நேரத்திலேயே மனிதன் இறந்து போய்விடுவான்.

அவனைக் காப்பாற்றவும், அவனது ரத்தத்தில் கலந்த ஆல்கஹாலை பிரிக்கவும் ஒரு நொடிகூட ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும்! அது ஒரு போராட்டம், அப்படி போராடும் உறுப்பின் பெயர் கல்லீரல்!

இது ஆயிரத்திற்கும் மேலான என்சைம்களை உருவாக்குகிறது. நமது உடலில் சிறிய காயம் ஏற்பட்டு ரத்தம் வெளியேறினால் கூட உடனே மூளை கல்லீரலுக்கு தான் தகவல் அனுப்பும். பதறிப்போன கல்லீரல் நொடிப் பொழுதில் ரத்தம் வெளியேறும் இடத்திற்கு 'ப்ரோத்ரோம்பின்' என்ற ரசாயனத்தை அனுப்பி வைக்கும்.

அந்த ரசாயனம் ரத்தம் வெளியேறிக் கொண்டிருக்கும் இடத்தில் ஒரு சிலந்தி வலைப் போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி ரத்தத்தை உறைய செய்துவிடும். இதனால் ரத்த வெளியேற்றம் தடுக்கப்படுகிறது. கல்லீரல் மட்டும் இந்த வேலையை செய்யவில்லை என்றால் ஒரு சின்ன காயம் போதும் நம்மைக் கொல்வதற்கு.

இன்றைக்கு லேசான தலைவலி என்றாலும், உடல் மெலிவதற்கு என்றாலும், சத்துப் பற்றாக்குறை என்றாலும் மாத்திரைகளாக உள்ளே தள்ளுகிறோம். இந்த மாத்திரைகள் எல்லாவற்றிலும் நச்சுத் தன்மை நிறைந்திருக்கிறது. அந்த நச்சுத்தன்மையை உடலில் சேராமல் தடுத்து நம் உடலை பாதுகாப்பது கல்லீரல்தான்.

மதுவிலும் ஏராளமான விஷத்தன்மை உள்ளது. அந்த விஷத்தன்மையை போக்குவதற்காக இரவு முழுவதும் கல்லீரல் போராடுகிறது.

கல்லீரல் விஷத்திற்கு எதிராக போராடும் வரைதான் குடிகாரர்கள் எவ்வளவு குடித்தாலும் அசராமல் நிற்பேன் என்று வசனம் பேசமுடியும்.

கல்லீரல் கெட்டு விட்டது என்றால் அவரால் ஸ்டெடியாக மூச்சுக் கூட விடமுடியாது. அப்புறம் எங்கு வசனம் பேசுவது.

கல்லீரல் ஒருவருக்கு சரியாக இல்லையெனில், சாப்பிடும் எந்த உணவும் செரிக்காது. வயிறு உப்பி புளித்த மாவு போல அது வயிற்றிலும் குடலிலும் இருக்கிறது.

அத்தகைய முக்கியமானதொரு ஜீரண உறுப்பு இது. அதற்காக 'எவ்ளோ அடிச்சாலும் தாங்குதே; ரொம்ப நல்லது போல' என்று தாறுமாறாக அதற்குக் கஷ்டம் கொடுக்கக் கூடாது. கண்மூடித்தனமாக அளவு கடந்து



குடிக்கிறபோது கல்லீரல் வீக்கத்தைத் தடுக்க இயலாது.

கல்லீரலை கழுதையோடு ஒப்பிடுவார்கள். கழுதை எவ்வளவு பாரத்தை அதன் மீது தொடர்ந்து ஏற்றிக் கொண்டே இருந்தாலும் அசராமல் சுமக்கும். அதே கழுதை படுத்துவிட்டால் திரும்பவும் எழுந்திருக்கவே எழுந்திருக்காது.

கல்லீரலும் அப்படிதான் தொடர்ந்து குடிக்க குடிக்க மது என்னும் விஷத்தோடு ஓயாமல் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கும்!

இத்தகைய கல்லீரலை காப்பாற்ற மதுவையும் புகையும் தவிர்க்க வேண்டும். பால் கலந்த டீ, காப்பி மற்றும் செயற்கை குளிர்பானங்கள் போன்றவற்றை தவிர்க்க வேண்டும். அதற்கு பதிலாக கருப்பட்டி காப்பி, சுக்கு காப்பி, பால் கலக்காத இஞ்சு டீ மற்றும் எலுமிச்சை டீ, இயற்கையான பழச்சாறுகள், கரும்புச்சாறு, பதநீர், மோர் போன்றவற்றை பருகலாம். உணவை நிதானமாக மென்று விழுங்க வேண்டும்.

நமக்கு அசதியாக இருக்கும்போது ஓய்வுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். முடிந்தவரை தொட்டதிற்கெல்லாம் ஆங்கில மருந்துக்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

கல்லீரல் காத்து நலமாய் வாழ்வோம்!

# தொப்பைக்கான காரணம் தெரியுமா?





ஆண்களுக்கு மட்டுமில்லாமல் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தொப்பை வருவதற்கு முக்கிய காரணம் Toothpaste என்றால் நம்புவீங்களா?

பெண் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே மார்பகங்கள் பெரிதாவதற்கும் 10 வயதிலேயே பூப்பெய்துவதற்குமான காரணி களில் பற்பசையில் உள்ள வேதி பொருள்களும் ஒரு காரணம் என அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஆய்வுகள் உருதிபடுத்துகின்றன.

கறி+உமி+உப்பு கலந்து பயன்படுத்திய காலங்களில் பல் சம்மந்தமான பிரச்சனைகள் இருந்தது எனவோ உண்மை தான் நூற்றுக்கணக்கான மக்கள் வாழும் கிராமங்களில் ஒரு சிலருக்கு மட்டுமே பல் பிரச்சினைகள். இன்று 78% மக்களுக்கு அவசியமான நோயாக மாற்றியது எது?

Toothpaste, Toothpaste ஐ பயன்படுத்த வேண்டாம் என்பதற்கான அறிவியல் காரணங்கள் பல உண்டு.

1. பற்பசையில் உள்ள புளோரைடின் அளவானது 17 ppm-க்கும் மேல் இருக்ககூடாது என்பது மருத்துவ நியதி நாம் பயன்படுத்தும் பல Tooth Paste-ல் 80>100 ppm என்ற அளவில் உள்ளது.

2. பற்பசையில் உள்ள bleaching agent ஆனது பற்களுக்கும் ஈறுகளுக்குமான இறுக்கத்தை தளர்வாக்கி பல் ஆட்டம் சொத்தை உருவாக்கும். பற்பசையில் பல் துலக்கிய பிறகு உற்று நோக்கினால் ஈறுகள் சிவப்புநிறத்தில் காண்பதற்கு இதுவே காரணம்.

3. Sodium Lauryl Sulfate (SLS) இவை இல்லாத Toothpaste இல்லையென்றே கூறலாம். SLS இந்த வேதி பொருள் பெட்ரோல் உற்பத்தி நிலையங்களில் எண்ணெய் பிசுபிசக்கை போக்க பயன்படும் உயர் வேதி பொருள். இந்த SLS ஆனது வயிற்றில் உற்பத்தியாகும் HCL உடன் வினைபுரிந்து வயிற்றின் உட்பகுதியில் புண்களை ஏற்படுத்துகிறது. இந்த புண் தான் ulcer ஆக உருமாறி நமது உடலின் திரிதோஷமான வாதம்+ பித்தம்+ கபம் சீர் கேட்டை உருவாக்கி எல்லா நோய்களையும் அழையா விருந்தாளியாக வரவழைத்து வரவேற்கும். இப்போ சொல்லுங்கள் Toothpaste அவசியமா?

4. நமது பற்களுக்கும் மூளைக்கும் நேரடி தொடர்பு உள்ளது. கை விரலால் பல் துலக்கும் போது பற்களில் மேல் பகுதியில் அமைந்துள்ள நரம்பணுக்கள் மூலம் தூண்டபட்டு அகோர பசி உருவாவதை உணரலாம். இதுவும் ஒரு சிறந்த தொடு சிகிச்சை தான்.

பாரம்பரிய முறையாக மூலிகை பொடிகளை கொண்டு பல் துலக்குவதால் ஏற்படும் அளப்பரிய நன்மைகளால் உடல் ஆரோக்கியம் பெரிதும் பாதுகாக்கபடுவது மட்டுமின்றி நோய் அணுகாமல் வாழலாம்.

நமது உடலின் நுழைவாயிலான பற்களுக்கு நன்மை செய்வது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கி, அதன் மூலம் மட்டுமே நோய்களை உற்பத்தி செய்ய இயலும் என்பதை உணர்ந்த மேலைநாட்டு மருந்து கம்பெனிகளுக்கு எலிகள் இந்தியர்கள். கிராமத்தில் வாழும் மக்கள் இயற்கையாக உள்ள வேம்பு, ஆலங்குச்சி இருந்தும் இவற்றை பயன்படுத்துவதை மறந்து மெல்ல கொல்லும் விஷமான சந்தையில் விற்கும் Tooth Paste-ஐ பயன்படுத்துகின்றனர்.

பல் போகாமல் இருப்பதற்கான மரபான தரவுகளை முன்னெடுப்போம்.



# வினாடிகளையும் நிமிடங்களையும் வீணாக்காத துல்லியமானது ஜப்பானியர்கள் சமூகம்

ஜப்பானில், ஆரம்பப் பள்ளி முதல் ஆறாம் வகுப்பு வரை ‘‘நற்குணங்களும் நன்னடத்தைகளும்’’ என்று ஒரு பாடம் கற்பிக்கப்படுகிறது. அதில் மாணவர்கள் நற்குணங்களையும் மக்களுடன் உறவாடும் கலையையும் கற்றுக்கொள்கிறார்கள்!

ஜப்பானில் முதல் தொடக்கப் பள்ளி முதல் மூன்றாம் இடைநிலைப் பள்ளி வரை பரீட்சைகள், தேர்வுகள் எதுவும் இல்லை. காரணம் இந்த நிலைகளில் அவர்களுக்கு கற்பித்தல், படிப்பித்தல் அல்ல நோக்கம். மாறாக அவர்களிடம் ஆளுமைகளை வளர்த்தல், தார்மீக பண்பாடுகளை ஊக்குவிப்பதே குறிக்கோளாகும்.

ஜப்பானியர்கள், உலகில் மிகவும் வசதி வாய்ப்பானவர்களாக இருந்தும் வீட்டு வேலைக்காரர்கள் வைத்துக் கொள்வதில்லை. தாயும் தந்தையும் தான் வீட்டின் மொத்த பொறுப்பையும் சுமப்பார்கள்.

ஜப்பானிய பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் ஒவ்வொரு நாளும் கால் மணி நேரம் ஆசிரியர்களுடன் இணைந்து பள்ளிக்கூடத்தை சுத்தம் செய்வார்கள். இதன் மூலம் சுத்தம் சுகாதாரத்தின் மீது ஆர்வமுள்ள ஒரு ஜப்பானிய தலைமுறை தோன்றுவதற்கு வழிவகுத்தது.

ஜப்பானிய பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் தங்களுடன் பல் துலக்கும் தூரிகைகளை எடுத்துச்செல்வார்கள். சாப்பிட்ட பிறகு பல் துலக்குவார்கள், அதன் மூலம் அவர்கள் சிறு வயதிலிருந்தே தங்கள் ஆரோக்கியத்தை பேணிப் பாதுகாக்க கற்றுக்கொள்கிறார்கள்.

ஜப்பானில் பள்ளிக்கூட மாணவர்கள் உண்ண முன்னர் அரை மணி நேரத்திற்கு முன்பே ஆசிரியர்கள் சாப்பிட்டு விடுவார்கள். அதன் மூலம் உணவின் பாதுகாப்பை உறுதி செய்து விடுவார்கள். காரணம் ஜப்பானில் மாணவர்கள்தான் பாதுகாக்கப்பட வேண்டிய எதிர்கால தலைவர்கள் என்று கருதுதப்படுவதாகும்.

ஜப்பானில் துப்புரவுத் தொழிலாளர்கள் ‘‘சுகதார இன்ஜினியர்கள்’’ என்று சிறப்புப் பெயரில் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் மாதத்திற்கு 5,000 முதல் 8,000 அமெரிக்க டாலர்கள் சம்பளம் பெறுகிறார்கள். துப்பரவுத் தொழிலில் ஒருவர் நியமிக்கப்படும் முன்னர், எழுத்து மூலம் மற்றும் வாய்மொழித் தேர்வுகளுக்கு கட்டாயம் முகம் கொடுக்க வேண்டும்.

ஜப்பானில் ரயில்களில், உணவகங்களில் மற்றும் மூடிய இடங்களில் மொபைல் போன்களைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது, மேலும் சைலன்ட் நிலையில் மொபைலை வைப்பதற்கு ‘நன்னடத்தை’ என்று சொல்லப்படுகிறது.

ஜப்பானியர்கள் உணவகத்திற்குச் சென்றால், ஒவ்வொருவரும் தனக்குத் தேவையான உணவை மட்டுமே எடுத்துக்கொள்வதைப் பார்க்கலாம். யாரும் அளவுக்கதிக உணவைத் தட்டில் வைக்க மாட்டார்கள்.

ஜப்பானில் வருடத்திற்கு ரயில்கள் தாமதமாகும் விகிதாசாரம் 7 வினாடிகளாகும். ஜப்பானிய மக்கள் நேரத்தின் மதிப்பை நன்கு அறிந்து வைத்தவர்கள். அவர்கள் வினாடிகளும் நிமிடங்களும் வீணாகாமல் துல்லியமாக பார்க்கும் சமூகமாகும்.







காவல் ஆணையர் திரு.சந்தோஷ் ஹாதிமணி IPS அவர்கள் அறிவுறுத்தலில்

# கோடையை பயனுள்ளதாக்கும் வகையில் காவலர்கள் குழந்தைகளுக்கு அபாகஸ் பயிற்சி

திருநெல்வேலி மாநகர காவல் துறையில் பணிபுரியும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களின் குழந்தைகளுக்கு கோடை விடுமுறையை பயனுள்ளதாக்கும் வகையில் கணித அடிப்படை அபாகஸ் பயிற்சி மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் திரு.சந்தோஷ் ஹாதிமணி IPS அவர்கள் அறிவுறுத்தலின் பேரில், ஆசிரியர் திருமதி.யாஸ்மின் அவர்கள் (Sharp Abacus Learning School) மாணவர்களுக்கு 15 நாட்கள் பயிற்சி வகுப்புகள் நடத்தினார்கள்.

வகுப்பின் இறுதி நாளான 01.06.2025 அன்று 61 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி மாநகர காவல் ஆணையர் அவர்கள் பாராட்டினார்கள்.

நிருபர்: K.செல்வ நயினார், திருநெல்வேலி.



# பணியில் தீவிரம் காட்டி குற்றவாளிகளை கைது செய்த காவலர்களுக்கு அரியலூர் SP தீபக் சிவாச் IPS அவர்கள் பாராட்டு

அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் துறையினர், காவல் ஆய்வாளர் திருமதி.சித்ரா அவர்களின் தலைமையில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். 29.05.2025 அன்று திருமானூர் பகுதியில் ரோந்து பணியின்போது, 1.050 கிலோ கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்த நபரை பிடித்து கைது செய்தனர்.

01.06.2025 கீழப்பழூர் பகுதியில் குற்றப் பிரிவு உதவி ஆய்வாளர் திரு.ராஜவேல் அவர்களின் தலைமையிலான காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, விற்பனைக்காக வைத்திருந்த 1.250 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்து, சம்பந்தப்பட்ட நபரையும் கைது செய்தனர்.

மேலும், உதவி ஆய்வாளர்கள் திரு.சரவணகுமார் அவர்கள், திரு.ஆனந்தன் அவர்கள் மற்றும் அவர்களின் தலைமையிலான காவலர்கள் அரியலூர் மற்றும் மீன்சுருட்டி பகுதிகளில் லாட்டரி விற்பனையில் ஈடுபட்ட நபர்களை கைது செய்தனர்.

இதேபோல, கயர்லாபாத் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் விபத்து ஏற்படுத்தி விட்டு நிற்காமல் சென்ற நபரை கயர்லாபாத் தனிப்பிரிவு காவலர் திரு. முருகானந்தம் அவர்கள் தீவிர விசாரணையின் செய்து கண்டுபிடித்தார். மேற்கண்ட மெச்சத்தை தகுந்த பணிகளை செய்த காவல் குழுவினரை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச் IPS அவர்கள் நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள்.


நிருபர்: R.தங்கப்பாண்டியன், அரியலூர்.

---



புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையத்தில் கண்டெடுத்த ரூ.80 ஆயிரம் மதிப்புள்ள தங்க சங்கிலியை நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்த அரிமளம் பகுதியை சேர்ந்த கீதா, சத்யா ஆகியோரை காவல் ஆய்வாளர் சுகுமாரன் உதவி ஆய்வாளர் பிரபாகரன் ஆகியோர் சால்வை அணிவித்து பாராட்டி வாழ்த்தினர்.

நிருபர்: AK.ஷாஜதா, புதுக்கோட்டை.



***ஹெல்மெட் அணியவில்லை என்று வழக்கில் குற்றவாளி கூண்டில் தள்ளப்பட்ட கல்லூரி மாணவர் ஒருவர் சரமாரியாக கேட்ட கேள்விகள். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் பதில் அளிக்க முடியாமல் திணறினர்.***

# ஏன் ஹெல்மெட்?

ஒரே ஒரு ஹெல்மெட் தானே போடச் சொன்னாங்க...! அதுக்கு இவ்ளோ கோவமா..?

உயர் நீதிமன்ற உத்திரவுப்படி ஹெல்மெட் வேட்டையாடும் காவல் துறையின் கண்டிப்பு மேலும் விரிவடைய விரும்புகிறேன்.

1. பஸ்ஸில் பயணம் செய்ய 55 பேருக்கு மட்டுமே license தரப்படுகின்றது. ஆனால், சராசரியாக 110 பேர் வரை திணிக்கப்படுகின்றனர். படிக்கட்டில் மட்டும் 18 பேர் தொங்க விடப்படுகின்றனர்.

2. ரயிலில் ஒரு பெட்டிக்கு 72 பேர் தான். ஆனால் பயணம்...?

3. ஒவ்வொரு பத்திரப்பதிவு அலுவலகத்திலும் லஞ்சம் கொடுக்காமல் வேலை முடியுமா?

4. ஓவர் லோடு கேஸ் போட்டால் லாரி பஸ் ஒரு நாள் கூட ஓடாது.

5. Share Auto வில் 22 பேரை ஏத்தறாங்க, தடுக்கலாமே?

6. அரசு Cable TV கட்டணம் 70 ரூபாய். கேள்வி கேட்டா படம் தெரியுமா மக்களுக்கு... தடுக்கலாமே?

7. Point to Point, LSS, Express அடடா. கட்டணக் கொள்ளையை இரண்டே நாளில் அரசு தடுக்கலாமே?

8. ஸ்டாம்ப் பேப்பர் 20% அதிக விலை. ஒரு நாள் போதுமே. தடுத்து விடலாம். பாவம் அப்பாவி பொதுமக்கள்.

9. பேருந்துல 2 ரூபாய் சில்லறை வாங்காம இறங்கக் கூடாதுன்னு தூங்காமயே வர்றான் பொது ஜனம்.

10. 30 ரூபாய் டிக்கெட் 90 ரூபாய். Online Book செஞ்சா, மேலும் ரூபாய் 20. Cyber Crime-ல கேஸ் போடலாமா தியேட்டர்காரன் மேல?

எப்படிப்பட்ட கேப்மாரித்தனம்,

மொள்ளமாரித்தனம்!

ஹெல்மெட் அணியாவிட்டால் ஆவணங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படுமாம்.

ஊழல் செய்து சிக்கிய மந்திரிகளின் சொத்துக்களை / ஆவணங்களை பறிமுதல் செய்ய மாட்டார்கள்.

பல மாடி கட்டிடங்கள் இடிந்து பல பேர் பலியாகினாலும் கட்டுவதற்கு உரிமம் கொடுத்த அதிகாரிகளின் ஆவணங்களை பறிமுதல் செய்ய மாட்டார்கள்.

தவறான மருத்துவத்தால் பல பேர் பலியாகியும் மருத்துவம் கொடுத்த மருத்துவர்களின் சான்றிதழ்களை பறிமுதல் செய்ய மாட்டார்கள்.

ஆற்று மணலை கொள்ளையடிப்பதற்கு உடந்தையாக செயல்படும் வருவாய்த்துறை அதிகாரிகளின் பதவிகளை பிடுங்க மாட்டார்கள்.

மலைகளே காணாமல் போகும் அளவிற்கு கனிம வள கொள்ளைக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளின் சான்றிதழ்களை பறிமுதல் செய்ய மாட்டார்கள்.

“மறந்து வீட்டில் விட்டு விட்டு போய்விடும் ஹெல்மெட்டுக்காக உங்கள் இருசக்கர வாகனத்தின் ஆவணங்கள் பறிமுதல்
செய்யப்படுமாம்”

கேணப்பய ஊர்ல கிறுக்குப்பய நாட்டாமை பண்ணாணாம்..

ஹெல்மட் விஷயத்தில் கடுமையாக நெருக்கடி கொடுக்கும் நீதியரசர்களே, காவல்துறையினரே..

உங்களிடம் சாமானிய மக்களில் ஒருவனாக சில கேள்விகள் கேட்க ஆசைப்படுகிறேன்!

ஹெல்மெட் அணியாமல் வந்த கிட்டத்தட்ட 1,40,000 பேர் வரை வழக்கு பதிவு செய்து வாகனங்களை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் அலைய வைத்துக் கொண்டு இருக்கிறீர்களே.

புகை பிடித்தால் மரணம் நிச்சயம் என்று தெரிந்தும், அதில் கருகிய நுரையீரல் படத்தை மட்டும் போட்டு விட்டு விற்பனை செய்ய அனுமதி அளித்துள்ளது சரியா?

குடிப்பழக்கம் உயிருக்கும், வீட்டுக்கும், நாட்டுக்கும் கேடு என்று அச்சிட்டு விட்டு அதை அரசாங்கமே விற்பனை செய்வது நியாயமா?

நீங்கள் தீர்த்து வைக்க வேண்டிய கோடிக் கணக்கான வழக்குகள் நிலுவையில் இருக்கும் போது சாமானிய மக்களை வாட்டி வதைக்கும் இந்த வழக்குகள் அவசியம் தானா?

தமிழகத்தில் உள்ள அனைத்து சாலைகளும் தரமானதாக உள்ளது என்று உங்களால் உத்தரவாதம் அளிக்க முடியுமா?

நீதிபதிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு 10 நாட்களுக்கு ஹெல்மெட் அணிந்து இருசக்கர வாகனங்களில் வலம் வந்து ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தி காட்டமுடியுமா?



ஹெல்மெட் என்பது அவசியம் தான் இல்லையென்று மறுக்க முடியாது.
அது நெடுந்தூர பயணங்களில் நெடுஞ்சாலையில் செல்பவர்களுக்கு பொருந்தும்.

20– 30 கி.மீ. வேகத்தில் செல்லும் நகர வாசிகளை ஏதோ குற்றவாளிகளை பிடிப்பதுபோல் விரட்டி விரட்டி பிடிப்பது தான் உங்களுடைய விருப்பமா?

சமீபத்தில் ஹெல்மட் அணியாத ஒருத்தரை ஒரு காவலர் விரட்டி அந்த இரு சக்கர ஓட்டுநர் விபத்தில் சிக்கி பலியானார்.

இந்த சட்டம் அமலுக்கு வந்த பின், இதுவரை ஹெல்மெட் அணிந்தும் 30-க்கும் மேற்பட்டவர்கள் சாலை விபத்தில் பலியாகி உள்ளார்களே அதற்கு என்ன விளக்கம் தரப்போகிறீர்கள்?

சாலை விதிமுறைகளை பற்றிய தகவல்களை பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கட்டாய பாடமாக கொண்டு வந்து விழிப்புணர்வை ஏற்படுத்தலாமே?

ஹெல்மெட் அணிவதால் சிலருக்கு வியர்வை, அலர்ஜி, தலைவலி, முடி கொட்டுதல், தலையில் புண் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகிறது.

கொலை, கொள்ளை, வழிப்பறி செய்யும் சமூக விரோதிகளுக்கு சாதகமாக அமைகிறது.

ஹெல்மெட் அணிவதன் அவசியத்தை மட்டும் வலியுறுத்தி விட்டு போகலாமே?

மீத்தேன், ஹைட்ரோ கார்பன், நியூட்ரினோ இவையெல்லாம் எதற்காக?

வண்டி ஓட்டுபவர்களுக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு ஏன்?

இப்பொழுது சொல்லுங்கள்..

ஹெல்மெட் அணிவதை நீங்கள் கட்டாயப்படுத்துவது எந்த வகையில் நியாயம்?




**வெளி மாநிலத்திலிருந்து கடத்தி வந்த ரூ.30 லட்சம் மதிப்பிலான**

# 100 கிலோ கஞ்சாவை கைப்பற்றிய இராணிப்பேட்டை போலீஸார்

இராணிப்பேட்டை மாவட்ட போலீசாருக்கு கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் வெளிமாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு கடத்தி வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் அவர்களை பிடிக்க தனிப்படைகள் அமைத்து தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி இராணிப்பேட்டை போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இராணிப்பேட்டை காவல் ஆய்வாளர் தலைமையிலான போலீசார் வெளிமாநிலத்திலிருந்து கடத்திவரப்பட்ட சுமார் ரூ.30 லட்சம் மதிப்பிலான 100 கிலோ கஞ்சா பறிமுதல் செய்து அதனை கடத்தி வந்த கேரளா மாநிலத்தைச் சேர்ந்த இரண்டு எதிரிகள் 1.சுரேஷ்(எ)தேவன் அலி(வ/29) த/பெ.சுரேந்திரன், 2.சுஜின் (வ/22) த/பெ சுனில்குமார் ஆகியோரை கைது செய்து, அவர்கள் கடத்தி வந்த கஞ்சாவை பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், அவர்கள் மீது வழக்குப் பதியப்பட்டு தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் சிறப்பாக செயல்பட்டு எதிரிகளை கைது செய்த காவல் அதிகாரிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார். இராணிப்பேட்டை மாவட்டத்தில் சட்டவிரோதமாக கஞ்சா போன்ற போதை பொருட்கள் கடத்துபவர்கள் மற்றும் விற்பவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என காவல் துறை சார்பாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நிருபர்: A.R.முருகேசன், இராணிப்பேட்டை.


செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**





# தமிழர்கள் வாழ்வியல் அதிசயங்கள்

நவதானியங்கள் ஒன்பது என நிர்மானித்த தமிழன் திசைகளை எட்டாகப் பிரித்தான்.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வட கிழக்கு, வட மேற்கு, தென் கிழக்கு, தென் மேற்கு.

திசையை எட்டாகப் பிரித்த தமிழன் இசையை ஏழாகக் கொடுத்தான்.

ச ரி க ம ப த நி

இசையை ஏழாக கொடுத்த தமிழன் சுவையை ஆறாக பிரித்தான்.

இனிப்பு, கசப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு.

சுவையை ஆறாக பிரித்த தமிழன் நிலத்தை ஐந்தாக பிரித்தான்.

குறிஞ்சி (மலைப்பகுதி), முல்லை (வனப்பகுதி), நெய்தல் (கடல் பகுதி), மருதம் (நீர் மற்றும் நிலம்), பாலை (வறண்ட பகுதி).

நிலத்தை ஐந்தாக பிரித்த தமிழன் காற்றை நான்காக பிரித்தான்.

தென்றல், வாடை, கோடை, கொண்டல்.

கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல், தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல், மேற்கிலிருந்து வீசும் காற்று கோடை, வடக்கிலிருந்து வீசும் காற்று வாடை.

காற்றை நான்காக பிரித்த தமிழன் மொழியை மூன்றாக பிரித்தான்.

இயல் (இயற் தமிழ்), இசை (இசைத்தமிழ்), நாடகம் (நாடகத்தமிழ்).

இம்மூன்றும் தமிழுக்கு இணையான கூறுகள் என்பதை முத்தமிழ் என்ற கருத்து கோட்பாடு வெளிப்படுத்தி நிற்கின்றது.

இம்மூன்று மொழிகளுக்கும் தமிழர்கள் கொடுத்த முக்கியத்துவத்தையும் முத்தமிழ் கோட்பாடு வெளிப்படுத்தி நிற்கின்றது.

மொழியை மூன்றாக பிரித்த தமிழன் வாழ்க்கையை இரண்டாக வகுத்தான்.

அகம், புறம்.

கணவன், மனைவி வாழும் வாழ்க்கை அக வாழ்க்கை.

வெளியில் இருக்கும் வியாபாரம் மற்றும் சுய ஒழுக்கம் எல்லாம் புற வாழ்க்கை.

வாழ்க்கையை இரண்டாக வகுத்த தமிழன். ஒழுக்கத்தை மட்டும் ஒன்றாக வைத்தான்.

ஒழுக்கத்தை ஒன்றாக வைத்தவன் அதை உயிரினும் மேலாக வைத்தான்.

இதைத்தான் அய்யன் வள்ளுவர் இரண்டு அடியில் அழகாகச் சொன்னார்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"



# வக்கீல்கள் ஏன் கருப்பு கோட் அணிகிறார்கள்?



நீதிபதிகள், வக்கீல்கள் கருப்பு நிற உடை அணிந்திருப்பதை நாம் நேரிலும், திரைப்படங்களிலும் பார்த்திருப்போம். ஏன் அவர்கள் கருப்பு நிற உடை அணிகிறார்கள் எனும் காரணம்,

கருப்பு நிற ஆடை வலிமை, அதிகாரம், பணிவு இவை மூன்றையும் குறிக்கிறது என்று சொல்லப்படுகிறது.

வக்கீல்கள் நீதிக்காக பணிந்து செல்ல வேண்டும் என்பதை குறிப்பதற்காகவே நீதிமன்றத்தில் இருக்கும் நீதிபதிக்கும் வக்கீல்களுக்கும் கருப்பு நிற ஆடை வழங்கப்பட்டது. மேலும், கருப்பு நிறத்தில் வெள்ளையை தவிர வேற எந்த நிறத்திலும் எழுத முடியாது. அதுபோல நீதிபதியின் முடிவே இறுதி முடிவு. எந்த சூழ்நிலையிலும் அதை மாற்ற முடியாது என்ற காரணமும் இருக்கிறது.

இதை கருப்பு கோட் அணிவதற்கான அடிப்படை காரணம் என்று சொன்னாலும் இதன் பின் ஒரு வரலாறு இருக்கிறது.

எட்வர்ட் III என்பவர் தான் 1327 ஆம் ஆண்டில் வக்கீல் தொழிலை தொடக்கினார். அவர் தொடங்கிய நீதிமன்றத்தில் தங்க சிவப்பு ஆடைகள் மற்றும் பழுப்பு நிற ஆடைகளை தான் வக்கீல்கள் அணிந்திருந்தனர்.

அதன் பிறகு 1637 ஆம் ஆண்டில், மக்களிடம் இருந்து இவர்களை வேறுபடுத்தி காட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கறிஞர்களின் உடைகள் மாற்றப்பட்டன. பொதுமக்களிடம் இருந்து வித்தியாசமாக தோன்றுவதற்காக வழக்கறிஞர்கள் நீண்ட ஆடைகளை அணியத் தொடங்கினர். இந்த கருப்பு கோட் அணியும் வழக்கம் 17 ஆம் நூற்றாண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

பிரிட்டனின் ராணி மேரி அவர்கள் 1694 ஆம் ஆண்டு பெரியம்மை நோயால் இறந்தார். அப்போது அவரது கணவர் கிங் வில்லியம்ஸ் அவர்கள் அனைத்து நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களையும் துக்கம் விசாரிக்க கருப்பு கவுன்களில் வரவேண்டும் என்று கட்டளையிட்டார். அந்த நிகழ்வு தான் இதற்கு ஆரம்பப்புள்ளியாக இருந்தது.

இந்த உத்தரவு பின்னர் ரத்து செய்யப்படாமல் தொடர்ந்தது. இதுவே வழக்கறிஞர்கள் கருப்பு நிற ஆடைகளை அணிய வேண்டும் என்ற நடைமுறைக்கு வழி வகுத்தது என்று சொல்லப்படுகிறது.

தகவல்: குரு.சரவணன், திண்டுக்கல்.

---

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**

---


எங்களிடம் கன்ஸ்ட்ரக்ஷன், வீடுகள், அடுக்குமாடி
குடியிருப்புகள் தரமான முறையில் கட்டி தரப்படும்.
டிரஸ் & பெப்பிரிக்கேசன் ஒர்க்ஸ்
சிறந்த முறையில் செய்து தரப்படும்.
எங்களிடம் ரப்பிஸ், மணல் கிடைக்கும்
JCB, டிப்பர் வாடகைக்கு கிடைக்கும்
அயான் கன்ஸ்ட்ரக்ஷன்
-:: தொடர்புக்கு ::-
Prop: S.அன்வர்தீன் ✆ 98424 75150
10, கான்மியான் பள்ளிவாசல் தெரு, பாலக்கரை, திருச்சி- 620 008.


மாத மாதம் வருமானம் தரக்கூடிய
வீட்டு மனைகள்
கொடைக்கானல், பெரும்பாறை
APPROVED DTCP APPROVED
ஏலக்காய், வாழை, பலா, அவகாடோ, மிளகு,
பட்டை, கிராம்பு, காபி, பாக்கு மரம், சில்வர் ஓக்
போன்ற மரங்களுடன் சொத்து
சதுர அடி
ரூ.500
மட்டுமே
தொடர்புக்கு: ✆ 786 78 28 203, 638 298 5562

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO